விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

# VALAMPURI

நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்
தங்க நகைகளுக்கு

மதனா
ஜுவல்லறி
177/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 10 செவ்வாய்க்கிழமை (23.04.2002) தொலைபேசி 3378 ஒலி 125



நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்த சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண யாழ் சுகாதார நிலைகுறித்து ஆராய்வதாகவும் மாகாண சுகாதர சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் (செல்வி) உமா சிவபாதசுந்தரம் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்

### சமாதான சூழ்நிலையை அடுத்து

# விசேட பொலிஸ் அதிரடிப்படையை கலைத்துவிட அரசாங்கம் முடிவு

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேரணை

(நமது நிருபர்)

**தற்போது நாட்டில் ஏற்பட்டுவரும் சமாதான சூழ்நிலையில் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரின் சேவை தேவையற்றதென்றும் இந்த அதிரடிப்படையை கலைத்துவிட்டு அவர்களை சாதாரண பொலிஸ் சேவையில் ஈடுபடுத்துவது என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் ரி.ஆனந்தராசா சமர்ப்பித்த பிரேரணையை அடுத்து அதனைக் கலைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

**பதில் பொலிஸ்மா அதிபரின் பிரேரணையை விசேட அதிரடிப்படையின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கடுமையாக எதிர்த்துள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதை அடுத்து சமாதான சூழ்நிலை ஏற்பட்டு வருவதனால் விசேட அதிரடிப் படையினர் தொடர்பாக பொலிஸ் தலைமையகத்தில் மாநாடு ஒன்று நடைபெற்றது. பதில் பொலிஸ்மா அதிபர் ரி.ஆனந்தராசாவினால் கூட்டப்பட்ட இந்த மாநாட்டிற்கு பொலிஸ் அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பதில் பொலிஸ்மா அதிபர் ரி.ஆனந்தராசா விசேட பொலிஸ் அதிரடிப் படைகளைக் கலைப்பதற்கான பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்திருந்தார். (08ம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்து இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிற்கும் அரசிற்குமிடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து கொழும்பு ஹைப்பார்க் மைதானத்தில் எதிர்ப்புக் கூட்டமும் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்கா, (08ம் பக்கம் பார்க்க)

## வேலணைப் பிரதேச சபை தலைவர் நேற்று பொலிஸாரால் கைது!

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தல் பிரசாரத்தின்போது ஊர்காவற்துறை, நாரந்தனைப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்துறைப் பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வேலணை பிரதேச சபைத் தலைவர் கே.கருணாகரகுருமூர்த்தி நேற்று நண்பகல் 1.00 மணியளவில் யாழ் மாவட்ட நீதவான்

தான சூழ்நிலை ஏற்பட்டு வருவத னால் விசேட அதிரடிப் படையினர் தொடர்பாக பொலிஸ் தலைமையக

இந்த மாநாட்டிற்கு பொலிஸ் அதிகா ரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். பொலிஸ் தலைமையகத்தில் நடை

ரணை ஒன்றைக் கொண்டுவந்திருந் தார். (08ம் பக்கம் பார்க்க)

தேர்தல் பிரசாரத்தின்போது ஊர்காவற் துறை, நாரந்தனைப் பகுதியில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர் பாக வேலணைப்பிரதேச சபைத் தலை வர் கே.கருணாகர குருமூர்த்தி

சபைத் தலைவர் கே.கருணாகரகுரு மூர்த்தி நேற்று நண்பகல் 1.00 மணியளவில் யாழ் மாவட்ட நீதவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் (08ம் பக்கம் பார்க்க)

# அல்லைப்பிட்டியில் படையினர் கெடுபிடி

# அரச பணியாளர்கள் வாக்குவாதம்

## சோதனை நடவடிக்கை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து தீவ கத்திற்குச் செல்லும் அரச உத்தி யோகத்தர்களுக்கும் அல்லைப்பிட் டியில் நிலை கொண்டுள்ள கடற் படையினருக்குமிடையே நேற்றுக் காலை பலத்த வாக்குவாதம் இடம் பெற்றது.

அரச பணியின் நிமித்தம் யாழ்ப் பாணத்திலிருந்து தீவகத்திற்கு பஸ்ஸில் செல்வோரை அல்லைப் பிட்டி சந்தியில் இறக்கி அவர்களை நீண்ட தூரம் நடக்கவைத்து சோதனை மேற்கொள்ளும் கடற்படையினரின் கெடுபிடி கடந்த சில தினங்களாக அதிகரித்துக் காணப்பட்டது.

இதனால் வெறுப்படைந்த அரச உத்தியோகத்தர்கள் நேற்றைய தினம் அல்லைப்பிட்டிச் சந்தியில் பஸ் ஸில் இருந்து இறங்க மறுத்து விட் டனர்.

இதனை அடுத்து அப்பகுதிப் பொறுப்பதிகாரி பஸ் தரித்து நின்ற இடத்திற்குச் சென்று பஸ்ஸிலிருந்தவர் களை இறங்கி சோதனை நடக்குமிடத் திற்கு நடந்துசெல்லுமாறு பணித் தார். எனினும்பொறுப்பதிகாரியின் பணிப்புரைக்கு உடன்படாத உத்தியோகத்தர்கள் பஸ்ஸில் இருந்து தாம் இறங்கி நிற்பதாகவும் சோதனைச் சாவடிக்கு நடந்து செல்ல முடியாது எனவும் ஒட்டு மொத்தமாகத் தெரிவித்துவிட்டனர்.

இதனை அடுத்து படை அதிக ரிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு மிடையே கடும் வாக்குவாதம் இடம் பெற்றது. இச்சம்பவம் நடைபெற்ற போது அவ்விடத்திற்குச் சென்ற வேலணை உதவி அரசாங்க அதி பர் இரத்தினம், தீவக வலயக் கல்விப் (08ம் பக்கம் பார்க்க)

## பிரபாவைக் கைதுசெய்யக் கோரி

# வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று உண்ணாவிரதம்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிற்குக் கொண்டுவரவேண்டுமெனக் கோரி காங்கிரஸ் கட்சியின் மூத்த தலை வரும் முன்னாள் மத்திய அமைச் சருமான வாழப்பாடி இராமமூர்த்தி

நேற்று சென்னையில் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

ராஜீவ் காந்தி கொலைவழக்குத் தொடர்பாக பிரபாகரன்ன இலங் கையில் இருந்து இந்தியாவிற்குக் கொண்டுவருவதற்கு பிரதமர் வாஜ் (08ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் இணையத்தளம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தி யோகபூர்வ இணையத்தளம் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அரசியல் யாப்பிற்கமைய ஜனா திபதியின் அதிகாரம், ஜனாதிபதி யின் கொள்கை மற்றும் சமாதா னத்திற்கான நடவடிக்கைகள் பற் றிய விடயங்கள் தொடர்பாக இந்த இணையத்தளத்தினூடாக தகவல் களைப் பெற முடியுமென - (08ம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தத்தை எதிர்த்து பிக்குமார் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக் குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துண ர்வு உடன்படிக்கைக்கு எதிராக பிக் குமார் முன்னணியினர் கொழும்பு கோட்டை புகையிரதநிலையம் முன் பாக நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியுள்ளனர்.

கோட்டை புகையிரத நிலையம் முன்பு உண்ணாவிரதத்தை மேற்கொண்ட பிக்குமார் ஆர்ப்பாட்ட ஊர்வலத் தையும் நடத்தியிருந்தனர். (வ)

## அனுருத்தவை விடுவிக்க கோரி மனு

(கொழும்பு)

உடவளவை படுகொலைச் சம் பவம் தொடர்பாக் கைது செய்யப் பட்ட முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவை விடுதலை செய்யுமாறு கோரி தெல் தெனிய நீதி மன்றில் மனு ஒன்று நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பான தீர்ப் பினை எதிர்வரும் 29ம் திகதி (08ம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் 2ரூ.ஆல் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை 2ரூபா வினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறி வித்துள்ளது. இதன்படி கொழும்பு விலை யில் 50ரூபாவுக்கு விற்பனை செய்யப் பட்ட சுப்பர் பெற்றோல் விற்றர் 52ரூபா ஆகவும், 26ரூபாக்கு விற்பனை செய்யப் பட்ட டீசல் லீற்றர் 28ரூபா ஆகவும் 17.40சதத் திற்கு விற்பனை செய்யப்பட்ட மண்ணெண் ணெய் 19.40 சதத்திற்கும் விற்பனை செய்யப்படவுள்ளது. இந்த விலை அதிகரிப்பு இன்று முதல் நடை முறைக்கு வருகின்றது. (த)

## சிறு விளம்பரம்


### தேவை

திருமணசேவை ஒன்றிக்கு25 -35வயது உடைய உதவியாளர் தேவை சம்பளம் பேசித் தீர்க்கப்படும் தொடர்பு கமலக்கண்ணன் திருமணசேவை 770,772 பருத்தித்துறைவீதி நல்லூர்யாழ்ப்பாணம்(4992)


## மாநகரசபையில் மராமரத்துக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று நடைபெற்ற யாழ். மாநகரசபையின்மராமரத்துக் குழுக்கூட்டத்தில், கொட்டடி கண்ணபுரம் வீதிகள் பொது நிதியிலிருந்து அமைப்பதெனவும், பொன்னப்பா ஒழுங்கை பிரப்பம் குளம் ஒழுங்கை ஆகியன தமிழர் விடுதலைக் கூட்டணி மாநகர உறுப்பினர்களான செல்லையா விஜயரட்ணம், ம. கருணாநிதி ஆகியோரின் இவ்வாண்டுக்கான உறுப்பினர் நிதியிலிருந்து புனரமைப்புச் செய்ய வேண்டுமெனவும் மராமரத்துக்குழு உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் கொண்டுவந்த பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு மராமத்துப் பொறியியலாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு வீதிகள் புனரமைப்புக்கு கடந்த ஜனவரி மாதமே உறுப்பினர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ)

## இராசி பலன்

23- 4- 2002
(சித்திரை10, செவ்வாய்)
ஏகாதசி மாலை 6. 42 வரை
பூரம் பி. இ. 5. 33வரை
ராகுகாலம் 3. 00- 4. 30
நல்லநேரம் 10. 30- 12.00
ஏகாதசிவிரதம், சித்தாமிர்தம்

**மேடம்**
மனக்கவலை, காரிய தாமதம், வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம்.

**இடபம்**
கல்வி மேன்மை, மனப் பதற்றம், முயற்சி தாமதம், உடல்நலக்குறைவு.

**மிதுனம்**
அன்னியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை, இனிய சம்பவம்

**கடகம்**
மாதர் நட்பு, கௌரவக் குறைவு, வார்த்தை செல்லாமை, காரியதாமதம்.

**சிங்கம்**
நல்ல முயற்சி, கற்பனை மிகுதி, பெரியோர் மதிப்பு, நண்பர்கள் உதவி.

**கன்னி**
பணச்செலவு, உணர்ச்சி வசப்படல், பிதா சிந்தை, நித்திரைக் குழப்பம்.

**துலாம்**
மனமகிழ்ச்சி, பெருமையடைதல், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.

**விருச்சிகம்**
அதிகபிரயாசை, சுபநிகழ்வு, கீழ்ப்படிவு, முயற்சிகைகூடும்.

**தனுசு**
உடல்உழைப்பு, புதியதிட்டமிடல். அச்சமானநிலை, முயற்சி தாமதம்.

**மகரம்**
போசனசுகம், எதிர்பாராத அச்சம், காரிய தாமதம், உடல்சோர்வு.

**கும்பம்**
திடீர்பயணம், கௌரமான நிலை, முயற்சி கைகூடும், சகோதரர் உதவி.

**மீனம்**
ஆரோக்கியம், இலட்சுமீகரம், காரியம் கைகூடும், தொழில் விருத்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# சமாதான முயற்சிகளுக்கு வலுவூட்ட மத்திய அரசைக் கோரவேண்டும்!

## தமிழக முதல்வருக்கு இந்துசமயப் பேரவை கடிதம்

(யாழ்ப்பாணம்)

''இலங்கைத்தமிழ்மக்களின் நலனுக்காக மத்திய அரசை உதவுமாறு கோரும் தார்மீகக்கடமை தமிழ்நாட்டு அரசுக்குண்டு' என்று தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கு இந்து சமயப் பேரவை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

இலங்கைத் தமிழ்ப் பிரதேசமும் இந்தியத்திரு நாடும் கடலால் பிரிக்கப்பட்ட போதும் மதமொழி, கலாசாரத்தால் ஒன்றுபட்டிருப்பதை இந்நேரத்தில் ஞாபகப்படுத்துவதில் பெருமை அடைகின்றோம். எமது நாட்டில் சைவமும் தமிழும் நிலைபெற்றிருப்பதற்கு இந்தியத் திருநாட்டின் அன்பும் ஆதரவும் என்றும் எமக்கு வேண்டியவை என்பதை நாம் உளமார உணர்வோம்.

இந்தியசுதந்திரப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் எமது நாட்டைச் சேர்ந்த பெரியார்களான சேர்பொன் இராமநாதன், சேர் வைத்திலிங்கம் துரைசாமி போன்றோர் அண்ணல் காந்தி மகானுடன் அளவற்ற அன்பு பூண்டு இலங்கைத் திருநாட்டின் சுதந்திரத்தைப் பெற்றெடுக்க முன்னின்று உழைத்தனர். தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டிய உரிமைகள் மறுக்கப்பட்டதால் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழ் சிங்கள மக்களிடையே வளர்ந்துவரும் பகைமை உணர்வு இனமோதலாகப் பரிணாமம் பெற்று பாரிய சேதங்களையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தி இலங்கைத் திருநாடே அழியும் நிலைக்கு வந்துள்ளது.

குறிப்பாக தமிழ் பிரதேசத்தில் நடைபெறும் கொடிய யுத்தத்தால் பல நகரங்களும் குக்கிராமங்களும் இருந்த இடமே தெரியாத அளவுக்கு முற்றாக அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் வாழ இடமின்றிநாடு நாடாக அலைந்து திரியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ் அவலங்களை எழுத்தில் அடக்கிவிட முடியாது.

தற்போது இறைவன் அருளால் நோர்வே அரசினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இச்சமாதான முயற்சி தமிழ் சிங்கள மக்களிடையே புதியதோர் புரிந்துணர்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி வருகின்றது.

இத்தருணத்தில் தமிழ்நாட்டின் புரட்சித் தலைவரான முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனின் வழியொற்றி தமிழ்நாட்டை வழிநடத்தி வரும் தாங்கள் இலங்கை வாழ் தமிழ்மக்களைக் காப்பாற்றும் வகையில் நோர்வே அரசால் முன்வைக்கப்பட்ட சமாதான முன்முயற்சியை மேலும் வலுவுள்ளதாக்க உதவுமாறு இந்திய மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டுமென்று தங்களை மிகுந்த பணிவன்போடு கோருகின்றோம்.

இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலை குழம்புமேயானால் இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களும் ஏன் சிங்கள மக்களும் அநியாயமாக அழியவேண்டிய சூழ்நிலை ஏற்படும். இந்த அழிவில் இருந்து எம்மைப் பாதுகாக்க தாங்கள் மிதந்த தியாகத்தோடு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். (ம)

## 30ஆயிரம்றொக்கற்கொள்வனவில்மோசடி
# ஊடகச் செய்திகளை மறுக்கிறது இராணுவத் தலைமை அலுவலகம்

(கொழும்பு)

30 ஆயிரம் றொக்கற்றுகள் கொள்வனவு செய்யப்பட்டதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் தவறானவை என்று இராணுவத்தலைமைஅலுவலகம்அறிக்கை மூலம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகமேற்படி அலுவலகம் இம்மாதம் 21ம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த பொதுத்தேர்தலின்போது இந்த றொக்கற்றுகள் கடனுக்கு கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் அந்த றொக்கற்கள் இதுவரை பரீட்சார்த்தமாக சுட்டுப் பார்க்கவோ அல்லது பரிசோதனை செய்யப்படவோ இல்லை என்றும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன

அத்துடன் அவற்றின் சந்தைவிலை 160 தொடக்கம் 170 அமெரிக்கடொலராக இருக்க இராணுவம் 210 அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்துள்ளது என்றும் அவை அங்கீகரிக்கப்படாத தொழிற்சாலைகளில் புதுப்பிக்கப்பட்டவை என்றும் ஊடகங்கள்தெரிவித்துள்ளன.

நாட்டின் பாதுகாப்புக் கருதி இத்தகைய கொள்வனவு பற்றிக் கூறுவது இராணுவ தலைமையகத்தின் வழக்கமல்ல.

எனினும் இத்தகைய நிலையில் பொய்யின் எதிரொலியாக பொதுமக்களின் மனதில் பிழையான பதிவுகள் ஏற்பட்டுவிடும்

ஒப்பந்தங்களைப் பெறுவதில் தோல்வியடைந்தஆயுத ஒப்பந்தகாரர்களால் செய்யப்படும் பிழையான பிரசாரங்கள் இராணுவத் தலைமையகத்தை பெரிதாக பாதிக்காவிட்டாலும் நாட்டின் பாதுகாப்பை முடங்கச் செய்துவிடும்.

பொதுத்தேர்தலுக்கு முன் 2000ம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி 30ஆயிரம் றொக்கற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடாகி இருந்தது. 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாவது தொகையான 10 ஆயிரம்றொக்கற்றுகள் கொள்வனவு செய்வதற்கு முன் இராணுவப் பரிசோதனைக்குழு ஸ்லோவாக் குடியரசிற்கு விஜயம் செய்தது

அக்குழு றொக்கற்றுக்களை பரிசோதித்துப்பார்த்ததோடு சுட்டுப் பரிசோதித்துப் பார்த்தது அக்குழுவின் அறிக்கை றொக்கற்றுகள் நல்ல நிலையில் இருப்பதாக உறுதிப்படுத்தியது.

அந்த றொக்கற்றுகள் புதுப்பித்தமைக்கான சான்றிதழ்களும் இராணுவத் தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்பட்டன.

எமக்கு கிடைக்கப் பெற்ற கேள்விகளில் 210 அமெரிக்க டொலர்மிகவும்குறைந்ததொகையாகும்பாதுகாப்பு அமைச்சு திறைசேரி ஆகியவற்றின் கண்டிப்பான நடைமுறைகளுக்கு அமைவாகவே இது பின்பற்றப்பட்டது.

செக் குடியரசிலுள்ள எம்.பி. ஐயிடமிருந்து றொக்கற்றுகளுக்கு கிடைத்த இரண்டாவது குறைந்த கூறுவிலை 344 அமெரிக்கடொலர்.

முன்னையதற்கும்இதற்கும் 134 அமெரிக்க டொலர் வித்தியாசம்.

20 ஆயிரம் றொக்கற்றுக்கள் சரியாக பரிசோதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டமை பொய்யாகும் 10 ஆயிரம் றொக்கற்றுக்களின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதுடன் சுட்டும் பரிசோதிக்கப்பட்டன.

அப்படியே மிகுதி 10ஆயிரம் றொக்கற்றுகளும் பரிசோதிக்கப்பட்டு அதி உச்ச பாதுகாப்பு வலயத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட செக் குடியரசில் உள்ள பொலிஸ்கா, ஸ்லோவாக் குடியரசிலுள்ளசற்.வி.எஸ்.டம்ஸ்கா, நோவா ஆகிய ஆயுதத்தொழிற்சாலைகளில் றொக்கற்றுகள் புதுப்பிக்கப்பட வில்லை என்று ஊடகங்கள் குற்றம் சுமத்துகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலை என்று ஊடகங்கள் குறிப்பிடும் ஸ்லோவாக் குடியரசிலுள்ள நோவத் தொழிற்சாலையில் றொக்கற்றுகள் புதுப்பிக்கப் பட்டன என்று இராணுவத் தலைமை அலுவலகம் திட்ட வட்டமாக தெரிவித்துக் கொள்கிறது.

இதற்கான சான்றிதழ்கள் அந்நாட்டு பாதுகாப்பு செயலாளரின் கையெழுத்தில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது (எ)

## தலைமன்னார் - ராமேஸ்வரத்துக்கிடையில்
# பாலம் அமைக்கும் பணிகள் திட்டமிட்டபடி 2004-ல் ஆரம்பமாகும்

(புதுடில்லி)

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான பாலம்அமைக்கும் பணிகள் 2004ம்ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை முதலீட்டுச்சபையின் தலைவர் அர்ச்சுனா மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் சென்னையில் நடைபெற்ற இந்திய இலங்கை முதலீட்டாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார். அவர்அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

இலங்கைப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் பதவியேற்றவுடன் இந்தியப்பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் 2004ம்ஆண்டு தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையில் பாலம் அமைப்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இதற்கான பணிகள் குறித்த தினத்தில் ஆரம்பமாகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கொழும்பு-தூத்துக்குடி துறைமுகங்களுக்கிடையில் நேரடி கப்பல் சேவையை ஆரம்பிப்பது குறித்து தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அதன்பின்னர் இந்த கப்பல்சேவை தலைமன்னார் இராமேஸ்வரம். சென்னை துறைமுகங்களுக்கு விஸ்தரிக்கப்படுமென்றும் அவர்கூறினார். (த)

## விண்ணப்பங்களை ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவையினால்நடத்தப்படவுள்ள 7பேர்கொண்ட ஹொக்கி சுற்றுப்போட்டிக்குரிய விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்று நாளை நண்பகலுக்குமுன்னர் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான அணிஒழுங்குத்தெரிவு நாளைமறுதினம் வியாழக்கிழமை பி.ப5.30 மணிக்கு உடற்கல்வி அலகில் இடம்பெறும். (த)

## மட்டு. மாவட்டத்தில் 5,386 குடும்பங்கள் மீளக்குடியேறவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 10வருடங்களாக 5ஆயிரத்து 386 குடும்பங்கள் இன்னமும் மீளக் குடியேற்றப்படாமல் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருவதாக மட்டு, செயலகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏறாவூர், மண்முனை, வாகரை, களுவாஞ்சிக்குடி, ஓட்டுமாவடி, காத்தான்குடி போன்ற இடங்களில் உள்ள மக்களே இவ்வாறு நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கும், கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் உள்ள எல்லைக் கிராமங்களில் உள்ள குடும்பங்களும், இராணுவத்தினர் குடிகொண்டிருக்கும் வீடுகளுக்கு சொந்தமான மக்களுமே இவ்வாறு வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ- 8)

# யாழ். பல்கலைக்கழகம் பூரணத்துவமானதாகத் திகழ

# உடனடியாக சட்டபீடம் ஆரம்பிக்கப்பட வேண்டும்

**வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில்இடம் பெற்ற, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையின் பணி நயப்பு விழாவில், யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஆற்றிய உரையின் தொகுப்பு.**

யாழ்ப்பாணப்பல்கலைக்கழககம் பூரணத்துவமான பல்கலைக்கழகமாகமாற வேண்டுமானால் அங்கு 'சட்டபீடம்' **(Faculty of Law)** உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

நீதித்துறையையும் நிர்வாகத் துறையையும் வலுவூட்டுவதற்காக மட்டுமன்றி அத்துறைகளில் காலத்தின் தேவைக்குஏற்ப பிரயோகிக்க வேண்டிய சட்டங்களை கணிப்பீடுசெய்யவும் மீளாய்வு செய்து சீரமைத்து எதிர்காலத்தில் தொழில்நுட்பங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கப் போகும் மனிதகுலத்திற்கு புதுமெருகூட்டி ஆய்வுகள் செய்வதற்காகவும் சட்டபீடம்இன்றியமையாததாகும்.

சட்டபீடம் ஆரம்பிப்பதன் நோக்கம் நீதி நிர்வாகங்களுக்கான சட்ட அறிஞர்களை உருவாக்குவதற்கு ஒருபுறம் இருக்க மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து சுயநிர்ணய உரிமையுடைய ஜனநாயகசுதந்திர புருஷர்களாக மக்களின் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகவும் செழுமையாகவும் அமைய வேண்டுமானால் அம்மக்களின் வாழ்க்கை விழுமியங்களுடன் தொடர்புடைய அவர்களது உணர்வுகளை புறக்கணிக்கும், அவர்களது வழக்காற்று சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், நீக்கப்பட்டுமண்ணுக்கும் மக்களுக்கும் இடையில் தொப்புள்கொடி உறவை ஏற்படுத்தும் தேசவழமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மாறிவரும் இன்றைய சமாதான சுதந்திர சூழலுக்கு ஏற்ப மீளாய்வு செய்யப்படுவதும் மறுசீரமைக்கப்பட்டு நடைமுறைக்கு ஏற்ப அர்த்தமுள்ள சட்டமாக கொண்டுவரவேண்டியதும் இன்றியமையாததாகும்.

## தேசவழமை தரும் பதில்

வடக்கு-கிழக்கு தமிழர்களது பாரம்பரிய தாயகம் என்பது பற்றி கேள்விக்கு உட்படுத்துவோருக்குதேசவழமை தகுந்த பதிலை தருகின்றது. தேசவழமை என்பது யாழ்ப்பாணத்திற்கு மட்டும் என்று ஆரம்பத்தில்வரையறுக்கப்பட்டு இருக்கவில்லை. அந்தவரையறை பின்னர் பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இன்றைய சூழ்நிலையில் தேசவழமை எவ்வாறு உருக்குலைந்து தேய்ந்து போனதென்பதை ஆராய்வது அவசியமாகும்.

சட்டம் என்று நாங்கள் பொதுவாகப் பேசும் போது மேற்கத்திய சட்டக்கருத்தினையே குறிப்பிடுகின்றோம். காரணம் சுமார் 450 ஆண்டுகள் நாங்கள் மேற்கு நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்தமையால் அவர்களின் சட்டக்கருத்துக்களேஎங்களை ஆட்டிப்படைத்து வந்துள்ளது. இன்றும் தேசவழமைச் சட்டம் உருக்குலைந்து ஆங்கிலச் சட்டமும், உரோம டச்சுச்சட்டமும் செல்வாக்குற்றுள்ளதைக் காணலாம்.

எனவே இன்றைய சூழ்நிலையில் தேசவழமைச் சட்டத்தை மதிப்பீடு செய்து மீளாய்வு செய்து மறுசீரமைக்க வேண்டியதன் அவசியத்தை கீழே குறிப்பிடும் உதாரணங்கள வலுவூட்டும் எனக் கருதுகின்றேன்.

மேற்கத்திய சட்டத்திற்கும் தமிழர்களின் தேசவழமைக்கும் இரண்டு முக்கிய வேற்றுமைகள், இருப்பதை அவதானிக்கலாம். தமிழரின் சமுதாய நோக்கு ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது கட்டுப்பாடுகள், கடமைகள், கடப்பாடுகள் இவற்றுக்கு அமைய பிறக்கின்றான் என்பதாகும்.

எனவே, வாழ்க்கையானது கடமைகளுக்கு அமையவே வாழ வேண்டும்என்பதாகும். தந்தை மகற்கு ஆற்ற வேண்டிய கடமைகள், மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமைகள், சணவன் மனைவிக்கு ஆற்றவேண்டிய கடமைகள், மனைவி கணவனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள், அரசன் மக்களுக்கும், மக்கள் அரசனுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள், இப்படியே சமுதாயம் என்பது கடமைகள் நிறைந்ததாகவே இந்திய உபகண்டத்தில் இருந்து வந்தது.

ஆனால், மேற்கு நாடுகள் முக்கியமாக 15 ம் நூற்றாண்டில் இருந்து ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது உரித்துக்களுடன் பிறக்கின்றான். அதனை மற்றவர்கள் எந்த விதத்திலும் பாதிப்படையச் செய்ய முடியாது என்ற சிந்தனை மேற்கத்திய நாடுகளில் மேலோங்கியது.

எனவே தமிழர்கள் கடமைகளை சமுதாயத்தின் அடிப்படை அம்சமாக கொள்ள மேற்கு நாடுகள் உரிமைகளையே அடிப்படையாக வலியுறுத்தின. கடமைகளும் உரிமைகளும் ஒரே சல்லிக் காசின் இருபக்கங்களே. அதாவது என்னை இன்னொருவன் அடிக்க முடியாது. அடி வாங்காமல் இருப்பது எனது உரிமை என்று ஒருவன் வாதாடுகின்றான். 'நான் அவருக்கு அடிக்கப்படாது. ஏனெனில் அது என் கடமை.' இது மற்றவர் கூறும் கூற்று.

ஆகவே மொத்தம் ஒரே நிலையை அல்லது முடிவை இருவேறு நபர்கள் வாயிலாக வரவழைக்கும் போது ஒருவர் உரிமையை நிலைநாட்டுபவராகவும் மற்றவர் கடமைவழி நிற்பவராகவும் காணப்படுகின்றனர். ஆனால் முன்னையவர் உரிமையை உரிமை பாராட்டும் போதுஅங்குஒலிப்பது அகந்தை, மிடுக்கு, அலட்சியம் ஆகிய பண்புகள். பின்னையவர் கடமை வழி நிற்கும் போது அவரை நெறிப்படுத்தும் பண்புகள் அன்பு, அமைதி பணிவு என்பனவாகும்.

## கடமைகளை மறந்து விட்டோம்

மேற்கு நாட்டினரின் சட்டநெறி உரிமைவழி நின்றதுஎன்றால தமிழர்சமுதாயநோக்கு கடமைவழி நின்றது. இது முதல்வேற்றுமைஎனவேதான் மேலே குறிப்பிட்டுள்ளது போல மேற்கு நாட்டுச்சட்டங்களின் செல்வாக்காலும் பிரயோகங்களாலும் தமிழரின் கடமை நெறி கடந்தஅரையாயிரம் ஆண்டுகளில் வழக்கொழிந்து போய் கொண்டு இருக்கின்றது. இதனால் உரிமைகள் தான் முன்நிற்கின்றன. கடமைகளைமறந்துவிட்டோம்

இரண்டாவது வேற்றுமை அறம் சார்ந்தது. அறம் என்பது உள்மனம் பற்றியது. அறவழி நிற்றல் என்றால் மனத்துக்கண் மாசிலனாக நிற்றல் என்று கருதப்படும். வெளியில் எவ்வாறு நடந்தாலும் ஒருவரின் உள்மனம் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதே அறவழி நிற்றலின் தாற்பரியம்.

ஆனால், மேலைத்தேய சட்டம் என்பதன்அர்த்தம்வேறு. நடத்தையை மையமாக வைத்தே உள்மனதை எடைபோடுகின்றது. மேலைத்தேச சட்டம்உள்மனம்எப்படி இருந்தால் என்ன வெளிநடத்தை அதனை பிரதிபலிக்கின்றதா என்பதே சட்டம் கேட்கும் கேள்வி ஆகும். எனவே மேலைத்தேச சட்டவியலானது வெளிச்சட்டங்களுக்கு அமைவாக மனித நடத்தை அமைகின்றதா என்பதைமட்டுமே ஆராய்ந்தது. தமிழர் காத்துவந்த அறநெறி மனித மனம் ஒழுக்கத்திற்கு அமைவாக அமைந்ததா அமைகின்றதா என்பதையே ஆராய்ந்தது. ஆகவே தமிழரின நெறி மேலைத்தேய சட்டவியலுக்கு அப்பாற்பட்டதாகத் தோன்றக்கூடும். ஆனால் அந்தவேற்றுமையில் தான் தமிழர்களின் தனித்துவத்தைக் காணலாம்.

## உரோம டச்சு சட்டம்

உரோம டச்சு சட்டத்தின் கீழ் வாக்கவதூறு **(Slander)** எழுத்து அவதூறு **(Libel)** என்று இரு குற்றச் செயல்கள் உண்டு. இவற்றை வைத்து வழக்குப் பதிவதானால் அவதூறுக்கு இலக்காகியவன் தனக்கு மதிப்புக்குறைவு எற்பட்டது. **(Loss ofReputation)** என்பதைநிரூபிக்கவேண்டும்.

அதாவது, மதிப்புக் குறைவு திடமான உணரத்தக்கதான உறுதியானஒன்றாகக்காட்டப்பட வேண்டும். தமிழ் நெறி என்பது கடும் சொல் வராது காப்பதே அறம். ஆகவேகடும் சொல் மதிப்புக்குறைவை ஏற்படுத்தியதோ இல்லையோ அதைச் சொன்ன மாத்திரத்திலேயே அறத்திற்கு ஒவ்வாதது ஆகிவிடுகின்றது. இங்கு உரிமை கடமை என்ற இரு கருத்துக்களுக்கும் இருக்கும் வேற்றுமை புலப்படுகின்றது.

மேற்கத்தைய சிந்தனையின்படி வெறும் அவதூறு குற்றமாகாது. அதாவது அவதூறாக பேசுவதுஎன்உரிமை. அது குற்றமாவதற்கு மற்றையவர் கௌரவக்குறைவுக்கு ஆளாகி இருக்கவேண்டும். அவன் தனது மதிப்புக்கு பங்கமேற்பட்டது என்பதை ஒப்புவிக்காதுபோனால் அந்த அவதூறு குற்றமாகாது. இங்கு ஒருவனது காரியம் அல்லது செயல் அல்ல முக்கியம். அவன் எப்படியும் நடக்கலாம் இன்னொருவனுக்கு பாதிப்பு ஏற்பட்டதோ இல்லையோ என்பது தான் முக்கியமாகும்.

தமிழ்நெறியின்படி அவதூறான சொற்கள் வாயில்இருந்தோ பேனாவில் இருந்தோ வெளிவந்தவுடனேயே அது குற்றமாகின்றது. ஏனெனில் நாங்கள் கடமை வழியில் நிற்பவர்கள் ஆகும். இன்னொருவரை இம்சிக்கும் எண்ணமே வரக்கூடாது. அது எங்கள் கடமை. அந்தக் கடமையில் வழுவுவோமானால் குற்றம் புரிகின்றோம் என்று அர்த்தம்.

## மார்க்கமும் நோக்கமும்

மனத்துக்கண் மாசிலன்ஆக ஒருவன் நடந்து கொள்ள வேண்டும் என்று தமிழ் நெறி எதிர்பார்க்கையில், அவனின் பிழைப்புவழியில் மாசு அற்று இருக்கவேண்டும் என்று பொருள்படுகின்றது. ஆகவேமார்க்கம்எவ்வழிபாய் இருப்பினும் இறுதி நோக்கே முக்கியம் என்று கூறும் மேற்கத்தைய சித்தாந்தத்திற்கு நேர்மாறாகவே தமிழ்நெறி அமைகின்றது,

அதாவது மார்க்கமும் நோக்கமும் மாசு அற்று இருக்க தமிழ் நெறி வலியுறுத்துகின்றது.

மேலே கூறிய உதாரணங்கள் மூலம் மேலைத்தேயச் சட்டங்களின் செல்வாக்கும் பிரயோகமும் தமிழ் மக்கள் ஆளப்படும் இனமாக இருந்ததனால் அவர்களது உணர்வுகள் புறக்கணிக்கப்பட்டு அந்த மக்களதுவழக்காற்றுச் சட்டங்களில் பாரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட தேசவழமைச் சட்டத்தின்ஆத்மாவையே தொலைத்துவிட்ட நிலையில் இருப்பதை சந்தேகத்திற்கு அப்பால் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் பிரதம நீதிபசராக இருந்த **Sir Alexander-JohnStone** என்பவர் தனதுமுதலாவது யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு சென்றதும் பிரித்தானிய அரசிற்கு அவர்சமர்ப்பித்த அறிக்கையில் ஒரு விடயத்தை ஆச்சரியத்தோடு தெரிவித்து இருந்தார். தமது பாரம்பரிய சமூக நிறுவனங்களின் பால் இத்துணை பற்றும் மதிப்பும் வைத்து இருப்பதில் யாழ்ப்பாண மக்களுக்கு இணையாக வேறு எவரையும் நான் கண்டதில்லை.

எனவே நீதி நிர்வாகத்தின் மீது அவர்களுக்கு மதிப்பு ஏற்பட வேண்டுமாயின் நீதிமன்றங்கள் இயன்ற அளவுக்கு அந்த வழக்காற்றுகளை கண்டிப்பாக பின்பற்றி தீர்ப்பு வழங்க முயற்சிக்க வேண்டும். அதற்கு முதற்படியாக டச்சு மொழியில் இருக்கும் தேச வழமைக் கோவையை ஆங்கிலத்தில்மொழி பெயர்த்தல் வேண்டும் என்றார்.

## தேசவழமை எது?

எனவே தேசவழமை என்று தற்போது எம்மால் அறியப்படுவது குடியேற்ற ஆட்சியாளர்களால் தங்கள் தேவைகளுக்கு என தொகுக்கப்பட்ட சிலவழக்காற்று ஏற்பாடுகளே ஆகும். எனவே அவர்கள் தேச வழமையை தொகுப்பதற்கான அவசிய தேவையாக இருந்தது தடங்கலின்றி தாம் ஆட்சி பரிபாலனம் செய்ய வேண்டும் என்ற அக்கறையே தவிர அந்தந்த மக்கள் தமது சொந்தச்சட்டங்களினால் ஆளப்பட வேண்டும் என்ற ஜனநாயக விருப்புக் காரணமாக அல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அத்துடன், இத்தேசவழமையை முதன் முதலாகத் தொகுத்த டச்சுக்காரர்கள் தேசவழமை வழக்காற்றுக்களில் முழுவதையும் தொகுக்கவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆகவே மக்கள் எந்தெந்த வழக்கங்களை அத்தியாவசியமானதாக கருதுகிறார்கள் எவற்றை சமூ நீதியின் அடிப்படையாகக் கொள்ளுகின்றார்கள் என்பதை அந்த மக்களே நன்கு அறிந்துஇருக்க முடியும்.

முக்கியமாக விவசாயத்தையே பாரம்பரிய தொழிலாகக்கொண்ட ஒரு சமூகத்திற்கும் விவசாய கா களுக்கும் என்றும் ஏற்புடையதான சட்ட ஏற்பாடுகளே தேசவழமையில் காணப்படுகின்றன. மண்ணின்இயல்பை மாற்ற முடியாது என்பது போலவே மக்களின் அடையாளத்தையும் மாற்றவே கூடாது.

எனவேதான் மக்கள் தங்கள் தலைவிதியை தாமே தீர்மானிக்கும் காலம் தற்போது கனிந்து வருவதால் தேசவழமைச்சட்டம் கணிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டு இன்றைய தொழில்நுட்பநவீன விஞ்ஞான உலக வாழ்க்கைக்கு அமைய சீரமைத்து புதுமெருகூட்டுவதற்கான ஆய்வுகூடமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமையவேண்டிய சட்டபீடம் மாறவேண்டும்என்பது காலத்தின் கட்டாய தேவைப்பாடு என நான் கருதுகின்றேன்.

# முப்படைகளுக்குமான ஆயுதக் கொள்வனவைத் தீர்மானிக்க குழு அமையும்

முப்படைத்தளபதிகளுக்கான ஆயுதங்கள்கொள்வனவு செய்து கொள்வதனை தீர்மானிக்கும் வகையில் குழுவொன்றை நியமிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

எதிர்காலத்தில் முக்கியமான ஆயுதங்களையும், ஏனைய இராணுவ உபகரணங்களையும் கொள்வனவு செய்து கொள்வதனை தீர்மானிப்பதற்காகவே இக்குழுவை நியமிக்க பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

இராணுவத்தினர் பயன்படுத்தும் ஆயுத தளபாடங்களின் தேவைகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டதும், எவ்வித தாமதமுமின்றிஅவை பெற்றுக்கொள்ளப்படுவதை இக்குழுவே நிச்சயிக்கும் என இராணுவ தளபதி பல கல்ல தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தின் போது ஆயுதங்கள், யுத்தவிமானங்கள் ஏனைய இராணுவ உபகரணங்கள் கொள்வனவு தொடர்பாக மோசடிகள் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டகுற்றச் சாட்டைத் தொடர்ந்தே, இக் குழு நியமிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## சங்கிலி அபகரிப்பு

நண்பகல் வேளையில் வைத்திய சாலை சென்றுவந்த வயோதிப மாதுவின் தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற சம்பவம் கோப்பாய் அதிகார் வீதியில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.(7 9

## குறை மருத்துவ சேவை பரீட்சை முடிவுகள் வெளி வரவில்லை

### பரீட்சார்த்திகள் கவலை

(ஈச்சமோட்டை)

இலங்கை சுகாதாரதிணைக்களத்தினால்2000ஆம் ஆண்டு ஆனிமாதம் 19 ஆம் திகதி நடத்தப்பட்ட குறைமருத்துவ சேவைப் பரீட்சைக்கான பெறுபேறுகளை 22 மாதங்கள் கடந்த நிலையிலும்வெளியிடாமல்இருப்பது பற்றிபரீட்சார்த்திகள் பலத்த ஏமாற்றமும் கவலையும் அடைந்துள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனக் குறைவாக விருப்பதால் ஏமாற்றமடைந்துள்ள இவர்கள், சுகாதார அமைச்சரிடம் இதனை தெரியப்படுத்துவதன் மூலம் தமது பிரச்சினைக்குத்தீர்வுகாண முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

(சு-59)

கல்வியின் முக்கியம் உணராது

## புள்ளிகளைப் பெறுவதே மாணவரின் குறிக்கோள்

### யாழ். மத்திய கல்லூரி அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் கல்வித் தத்துவம் கூறும் உண்மையான கல்வி அறிவைப் பெறாது வெறுமனே காகிதப் பெறுப்பேற்றுக்காகவும் பல்கலைக்கழக அனுமதிக்காகவும்,புள்ளிகளைப் பெறும் நடவடிக்கையாகக் கல்வியைக் கருதுகிறார்கள் என்று யாழ். மத்திய கல்லூரிஅதிபர் க.இராசதுரை தெரிவித்துள்ளார்.

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வழங்கும் வைபவம் அண்மையில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

பாரம்பரிய முறைப்படி மாணவர்பெற்றோர், மதகுரு, ஆசிரியர் ஆகியோரைவணங்கி அனுமதி அட்டைகளைப் பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில், ஆபாச உணர்வுகளைத் தூண்டும் சினிமாக் குப்பைகள் சமுதாய இளம் சந்ததியினரை தவறான பாதையில் அழைத்துச் செல்கின்றன.

எனவே, கல்வித்தத்துவமும் பண்பாடும் சீரழிந்து போகாது பாடசாலை அதிபர்கள்செயற்பட வேண்டும் என்றார்.

(எ)

வட-கிழக்கு மாகாண

## அபிவிருத்தித் திட்டங்களை உலகவங்கி அவதானிக்கும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குமாகாணங்களில் இடம்பெறும் ஆரம்ப அபிவிருத்தி வேலைகளுக்கு உதவ உலகவங்கி முன்வந்துள்ளது.

அண்மையில் வாஷிங்டனில் இடம்பெற்ற பொருளாதார விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் உலகவங்கித் தலைவர் ஜெனின் வொல்பிறன்ஸ்க்கும் இடையிலான சந்திப்பின்போது இதற்கான உடன்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தகவல்தொலைத்தொடர்பு மற்றும் கல்வித்துறைசார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் நாட்டின் வறுமை ஒழிப்புத் தொடர்பான திட்டங்களுக்கும் உலகவங்கிஉதவ உள்ளது.

நாட்டின் வறுமை ஒழிப்புத் திட்டங்கள்பற்றிய விபரங்களை உலகவங்கிக்கு கையளிக்கவுள்ளதாகவும் சமாதான முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகளை உலக வங்கி அவதானித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-5)

## ஊவா மா.சபை உறுப்பினர் பிரபாவைச் சந்திப்பர்

(கொழும்பு)

ஊவாமாகாண சபையைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்திப்பதற்கு எதிர்வரும் 29 ஆம் திகதி இராணுவக்கட்டுப்பாடற்றவன்னிப்பிரதேசத்துக்குச் செல்லவுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாண உத்தேச இடைக்கால நிர்வாக சபையின் அமைப்பு, அதிகாரங்கள் பற்றியும் ஏனைய இடங்களிலுள்ள மாகாண சபைகளுக்கிடையிலான ஒத்துழைப்புகள் குறித்தும் அவர்கள் கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சிகம்யூனிஸ்ட் கட்சி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆறு அங்கத்தவர்களும் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(எ-8)

## நாட்டு நிலையை அவதானித்து அறிக்கை சமர்ப்பிக்க குழு

### ஜனாதிபதியால் நியமிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும்புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் நாட்டில் நடைபெற்று வரும்பொருளாதார, அபிவிருத்தி,இனப்பிரச்சினைகள் குறித்து நடவடிக்கைகளினை அவதானிப்பதற்கென ஜனாதிபதியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அங்கத்தவர்கள் கொண்ட இக்குழுவில், நிமல் சிறிபால்டிசில்வா தலைவராகவும், டபிள்யூ வி. ஜே. செனிவிரட்ண, அத்தாவொட செனவரட்ண. ரெஜினேஸ்ட் குரோ ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் அண்மையில் பிரபாகரனினால் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிற்கு பின்னர் இடம்பெற்றுவரும் முக்கிய விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையை உறுப்பினர்கள் சமர்ப்பித்ததும், யுத்த நிறுத்தம் சம்பந்தமான நிலைப்பாடுகளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு அறிவிக்கும்.

(உ-8,5)

## புலிகள்-படையினர் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் செயற்படுவர்

### இருதரப்பும் சந்தித்து இணக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் பரஸ்பரம் நேரடிப்புரிந்துணர்வுடன் செயற்படுவதுதொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரிலுள்ள 233வது படைப்பிரிவு தலைமை அதிகாரிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிராந்திய பொறுப்பாளர்களுக்குமிடையே புளியந்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சினேகபூர்வ சந்திப்பின் போதேஇவ்விணக்கம் காணப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரவேசம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தற்போதைய இயல்பு நிலை தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன.

இதேவேளை,அரசியல் நடவடிக்கையில் ஈடுபடும் புலி உறுப்பினர்களுக்கு இராணுவ அதிகாரியின் ஒப்பம்பிராந்திய பொறுப்பாளரின்ஒப்பம்இட்ட அடையாள அட்டை வழங்கப்படுவது தொடர்பாகவும் இராணுவ கெடுபிடிகள்சமூக சீர்கேடுகள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டு தீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பில் பாதுகாப்பு கட்டளை அதிகாரிலெப்டினட் கேணல் வி.எல்,ஆர்.அன்ரனி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி லெப்டினட் கேணல் எஸ்.எல்.குணசேகர விடுதலைப்புலிகள் தரப்பில் பிராந்தியப் பொறுப்பாளர் விசு துணைப் பொறுப்பாளர் துரை ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

(உ-9)

## விபரங்கள் சேகரிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால், சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் மீனவர்கள் வசமுள்ள வள்ளங்கள், கட்டுமரங்கள்,வாச்சுகள் என்பவற்றின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

(உ-250)

## புனராவர்த்தன கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்திஆலய புனராவர்த்தன நவகுண்ட பக்ஷஉத்தமமஹாயாக மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-246)

## மட்டக்களப்பில் இயல்பு நிலை திரும்பவில்லை

### நோர்வே குழுவிடம் சுட்டிக்காட்டு

(மட்டக்களப்பு)

அரசு - புலிகள் இடையே உருவாக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் அரச தரப்பு செயற்படாமையினால் மட்டக்களப்பில் இயல்பு வாழ்வு இன்னமும் ஏற்படவில்லை.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன், சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோர் அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போது,

மட்டக்களப்பு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன், நிலையை விளக்கி மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அம் மகஜரில் சுட்டிக்காட்டியிருப்பதாவது,

ஆலயச் சுற்றாடல்கள் பலவற்றிலும் படையினர் முகாமிட்டிருக்கின்றனர். இவர்கள் வெளியேறுவது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அத்துடன் வீதிகளில் தொடர்ந்தும், தடைகள் அகற்றப்படாதிருப்பதுடன் பல வீதிகள் பாவனைக்கும் விடப்படவில்லை.

ஒப்பந்தத்தின் பிரகாரம் மார்ச் 25 ஆம் திகதிக்கு முன்னர் வணக்கஸ்தலங்களில் இருந்து படையினர் வெளியேறியிருக்க வேண்டும்.

தவிரவும், பேச்சுக்கு முன்னதாக புலிகளின் மீதான தடை நீக்கப்படவேண்டும்.

சிறைச்சாலைகளில் வாடும் தமிழ்க்கைதிகள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை.

இவ் விடயங்களில் பேச்சுவார்த்தைக்கானபுரிந்துணர்வு ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வேநாடு கவனம் செலுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

(உ)

## 4800 ஆசிரியர்கள் பற்றாக்குறை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 4ஆயிரத்து 800 தமிழ் மொழி ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக மாகாண கல்விகலாசார விளையாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ராணுவகட்டுப்பாடற்றபகுதிகளான கிளிநொச்சி. முல்லைத்தீவு, மடு, கொக்கட்டிச் சோலை . மூதூர் போன்ற இடங்களிடையே மிகக் கூடுதலான ஆசிரியர்பற்றாக் குறை நிலவுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (த)

## சமாதானத்தின் பலாபலனை மக்கள் உணர ஆரம்பித்துவிட்டனர்

### சமாதானகல்லூரிமுன்னாள் பிரதிஇயக்குநர்

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பிரதமர் கைக்கொண்டுவரும் தொழில் சார்ந்த அணுகுமுறை பல தரப்பிலும் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது.

சர்வதேச சமாதான பாதுகாப்பு கல்லூரியின் முன்னாள் பிரதி இயக்குநரும், இலங்கையில் சமாதானப் பாதுகாப்புக் கல்லூரியினை ஆரம்பிக்கத் திட்டமிட்டு வருபவரும், சமாதான ஆர்வலருமான கலாகுமார ரூபசிங்க தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் கருத்துக் கூறுகையில்,

கடந்தகாலத் தவறுகளைக் கருத்தில்கொண்டு ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் சமாதான முன்னெடுப்புகள் புலிகள் தரப்பில் மட்டுமன்றி உலகனைத்திற்கும் நம்பிக்கை ஊட்டியுள்ளது.

பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் முறைகள் திருப்திகரமாக உள்ளதாக நான் உணர்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சமாதானத்திற்கான ஆதரவு நாளுக்குநாள் பெருகிவருவதுடன், அதன் பலனையும் மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர்.

இதனால் நாட்டில்பதற்றம் குறைவடைந்து மக்கள் மத்தியில் பெருத்த நிம்மதிதோன்றியுள்ளது.

அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் ஒத்துழைப்புடனும், உயர் மட்ட அமைச்சர்களின் ஆதரவுடனும் சமாதான முயற்சிகள் நகர்ந்து செல்வது நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

சமாதானப் பாத யாத்திரையில்

## இந்துத் தெய்வ விக்கிரகங்கள்

(கொழும்பு)

கதிர்காமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப்புறப்பட்டு வரும் சமாதானப்பாத யாத்திரையில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்கென முருகன்,வள்ளி,தெய்வயானை விக்கிரகங்கள் எடுத்து வரப்படுகின்றன.

ஜிந்துப்பிட்டி ஜெயந்திநகரம் சிவசுப்பிரமணிய ஆலய இவ் விக்கிரகங்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (உ)

# இன்று ஒரு தகவல்

## வாயு நீக்கும் எலுமிச்சை

சித்த மருத்துவத்தில் பழம் என்றாலே அது எலுமிச்சம் பழத்தைத்தான் குறிக்கும். ஜம்பீரம், நிம்பம் என்றவேறு பெயர்களுமுண்டு. இலை, காய், பழம்பயன்படுகின்றன. இந்தியாவில் பரவலாக எல்லா இடங்களிலும் தோட்டங்களில் வைத்து வளர்க்கப்படுகிறது இது செடிவகுப்பைச் சார்ந்தது. கொடி எலுமிச்சை என ஒரு வகையும் உண்டு. இதன் இலை பசுமை நிறத்துடன் இருக்கும். மேற்புறம் சிறு புள்ளிகளையுடையதாக, இருக்கும். இந்த புள்ளிகளில் எண்ணெய் இருக்கும். இச் செடியில் நிறைய முட்கள் காணப்படும். இதன் காய் பச்சை நிறத்துடனும் உருண்டையாகவும்இருக்கும். பழுத்த பின் இளமஞ்சள் நிறத்தில் எண்ணெய் கலந்த புள்ளிகளுடனும், நல்லமணம் உடையதாகவும் இருக்கும். இதன் உட்புறம் சுளையாகவும், இந்தச் சுளையிலிருந்து வரும் சாறு புளிப்புச்சுவை உடையதாகவும் இருக்கும். இது சுமார் எட்டு முதல் பத்து அடி உயரம் வரை வளரும்.

எலுமிச்சை வயிற்றில் சேர்ந்த வாயுவை அகற்றுவதுடன், உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்கும் தன்மையும் கொண்டது. எலுமிச்சம்பழம் பித்தத்தைத் தணிக்கச் சிறந்த மருந்துப் பொருளாகச் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப் படுகிறது. வயிற்றில் வாயுத் தொல்லை உள்ளவர்கள் இதன் பழரசத்துடன் சிறிது உப்பு அல்லது சீனிசேர்த்து அருந்திவர எழிதில் சீரணமாகி வாயுத்தொல்லை நீங்கும். அதிக தாகமுடையவர்கள் இப்பழரசத்தோடு சர்க்கரை சேர்த்து அருந்திவர தாகம் நீங்கும்.

எலுமிச்சம் பழரசத்தை முறையாக முடிக்கப்பட்ட பவள பஸ்பத்துடன் கலந்து கொடுத்துவர வாந்திபேதி, ரத்தக்கழிச்சல், பெருங்கழிச்சல் முதலியன குணமாகும். சிறுகுழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் இடைவிடாத கழிச்சலும், வாந்தியும் ஏற்பட்டால் சிறிது சீரகத்தை தேன் சேர்த்து, பொன்வறுவலாக வறுத்துக்கொண்டு, அதனோடு சிறிது எலுமிச்சம் பழரசம் சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டுக்காய்ச்சிக்கொடுக்க வாந்தியும் கழிச்சலும் உடனே நிற்கும். இந்தஎளியமருந்தை. கிராமத்திலுள்ள மக்கள் இன்றும் மேற் கொள்கின்றனர், எலுமிச்சை இலையைச் சமையலில் சேர்ப்பதும் வழக்கம். எலுமிச்சம் பழத்தை ஊறுகாயாகச் செய்து உண்டுவர பித்தமயக்கம் நீங்குவதுடன், உண்டஉணவும் நன்கு ஜீரணமாகும்.

இது ஒரு கற்ப மூலிகை. இதைத் தொடர்ந்து உண்டுவர அதிகநாள்இளமையோடு வாழ்வதுடன் நரை திரை முதலியனவும் மாறும். இது ஒரு தெய்வீக மூலிகையாகவும் கருதப்படுகிறது. எலுமிச்சை ரசத்தைப் பால் சேர்க்காத கடும் கோப்பியுடன் அருந்திவர மலேரியா சுரம் தணியும், நெஞ்சு எரிச்சலுக்கு எலுமிச்சை சாற்றுடன் நீர் கலந்துஇரண்டுவேளைஅருந்த குணமாகும். நீரிழிவு நோயில் ஏற்படும் தாகத்திற்கு எலுமிச்சம் பழச்சாற்றை நீருடன் கலந்து அருந்த தாகம்தீரும். எலுமிச்சம் பழத்தை எடுத்து இரண்டாக அரிந்து சாறு பிழிந்து அந்தச் சாற்றைத் தலையில் தேய்த்துக் குளித்து வரத்தலையிலுள்ள பொடுகுகள்நீங்கும்.

எலுமிச்சம்பழச் சாற்றுடன் தேவையான அளவு நீரும் உப்பும் கலந்து அருந்த மண்ணீரல் வீக்கம் குணமாகும். எலுமிச்சம் பழச்சாற்றை சில சொட்டுகள் மோரிலோ அல்லது தண்ணீரிலோ கலந்து கொடுத்தால் நல்ல குளிர்ச்சியைக் கொடுக்கும் சுரங்களின் போது ஏற்படும் தாக்கத்திற்கும் தோல்வறட்சிக்கும் இதனை வழங்கலாம். ஜலதோஷம்நீர்க்கோவைமுதலிய நோய்களுக்கு இப்பழச்சாற்றைவெந்நீருடன்கலந்து அருந்திவர வேண்டும். சீதக் கழிச்சலுக்கு எலுமிச்சம் பழச்சாறு அருந்தி வருவது நல்லது. எலுமிச்சம் பழச் சாற்றுடன்சம அளவு நீர் கலந்து வாய் கொப்பளித்து வரவாயிலுள்ள புண்களுக்கும் ஈறு நோய்களுக்கும் நல்லது. ஒரு டம்ளர் நீரில் அரை மூடி எலுமிச்சம் பழச் சாற்றைக் கலந்து இரவில் படுக்கைக்கு போகும் முன்னர்அருந்திவர வயிற்றை நன்கு சுத்தம் செய்து மலச்சிக்கலை நீக்கும். எலுமிச்சம் பழச் சாறு உடல் எடையைக் குறைக்கப்பயன்படும்.

அரைமுடி பழச்சாறு, ஒரு தேக்கரண்டி தேன், ஒரு டம்ளர் நீர் சேர்த்து தினமும் காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும். இதனை மூன்று மாதங்கள் தொடர்ந்து அருந்த வேண்டும். ஆனால் அதே சமயம் உணவுக்கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். 100 கிராம் எலுமிச்சம்பழத்தில், ஈரப்பதன் 84.6%, புரதச் சத்து 1.5%, கொழுப்புச் சத்து 1.0%, தாதுச்சத்து 0.7%, நார்ச்சத்து 1.3%, கார்போஹைரேட் 10.9%, கல்சியம் 90.மி.கி. பொஸ்பரஸ் 20 மி. கி இரும்புச்சத்து. 0.3 மி.கி.விற்றமீன் 'சி' 63 மி.கி. அடங்கியுள்ளன.

காய்ச்சலின் போது ஏற்படும் வாந்திக்கும்,, வாய் குமட்டலுக்கும் இதன் பழரசத்தினால் செய்யப்பட்ட சாதி சம்பீரக் குழம்பு பயன்படுத்தப்படுகிறது. சித்தமருத்துவத்தில் எலுமிச்சம்பழத்தைக் கொண்டு அயஜம் பீர கற்பம், அயபிருங்கராஜ கற்பம். கேசரி லேகியம் என பல மருந்துகள் தயாரிக்கப் படுகினறன. பல சித்தமருந்துகளைச் சுத்திசெய்யவும்எலுமிச்சம் பழச்சாறு பயன்படுத்தப் படுகிறது.

டாக்டர் இரா. கண்ணன்

# எமது வீடுகளை பார்வையிட

# அனுமதிமறுக்கப்படும் பட்சத்தில் போராட்டம் நடத்த தயங்கோம்

### எழுதுமட்டுவாள் வடக்கு-தெற்கு மக்கள் அமைப்பு தெரிவிப்பு

(மந்திகை)

தென்மராட்சி கிழக்கில் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டகுதிக்கு சென்று தமது வீடுகளை பார்வையிடுவதற்கு படையினர் அனுமதிக்காத பட்சத்தில் அகிம்சை வழியில் போராட்டம் நடத்த வேண்டி ஏற்படும்;

எழுதுமட்டுவாள் வடக்கு, தெற்கு, கரம்பகம் மக்கள் கலன் காக்கும் பிரிவே இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பு மேலும் தெரிவிக்கையில்; மேற் குறிப்பிட்ட பகுதிளுக்குச் சென்று எமது வீடுகளை பார்வையிட்டுவர எமக்கு இன்று வரை அனுமதி கிடைக்கவில்லை.

இது விடயம் தொடர்பாக தமிழ்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உரிய விதத்தில் அறிவித்தும் கூட எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பொதுமக்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட எழுதுமட்டுவாள் வடக்கு, தெற்கு, கரம்பகம் ஆகிய பகுதிகளிற்கு உழவு இயந்திரங்களில் செல்பவர்கள் வீதி அமைப்பதற்கு பயன்படும் ஊரிகளை ஏற்றிக் கொண்டு வருகின்றனர். அத்துடன் வீட்டுப் பொருட்கள் பலவும் திருடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-23)

# பேச்சு மூலமே சமாதானம் மலரும் 79.9 வீதமான மக்கள் நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள மக்களிடையே சமாதானம் தொடர்பான நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

'கொள்கை மாற்றீடுகள் நிலையம்' சமாதானம் தொடர்பாக சில காலமாக நடத்திவந்த ஆய்வுகள் மூலம் இவ்வுண்மை கண்டறியப்பட்டுளளது.

மேற்படி நிலையம்அண்மையில் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில்;

நாட்டில் விரைவில் சமாதானம் மலரும் என்ற நம்பிக்கை சில வாரங்களில் வலுவேகமாக தமிழ்மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது

2001ஆம் ஆண்டுசெப்ரெம்பரில் 5.9 வீதமாக காணப்பட்ட சமாதானம் தொடர்பானநம்பிக்கை2002 மார்ச்சில் 67.8 ஆக உயர்வடைந்துளது.

சமாதானத்தை ஏற்படுத்த இனஒற்றுமை அவசியம் என்பதை 2001 நவம்பரில் 46 1 சதவீத மக்களும், 2002 மார்ச்சில் 54 1சதவீத மக்களும் வலியுறுத்தியுள்ளனர்.

தவிரவும், 2001 ஜூனில் 16.8சதவீத ஏற்கப்பட்ட யுத்தத்தின் மூலமே சமாதானம் என்றகருத்துவலுவிழந்து 2002 மார்ச்சில்2.7 வீதமாக வீழ்ச்சியடைந்துளளது.

இதேவேளை, சமாதானப் பேச்சுக்கள் மூலமே யுத்தத்திற்குத் தீர்வு என்பதில் 79 9 வீதமான மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## புனராவர்த்தன கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகுஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயபுனராவர்த்தன நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று காலை7.00மணிக்கு விஷேட சந்தியாக பூஜை, காயத்திரிஹோமம், தீபாராதனை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம் மாலை 3.30 மணிக்கு விஷேடசந்தியாக பூஜை, மூலமந்திர ஹோமம், தீபாராதனை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம் என்பனவும்,

நாளை புதன்கிழமை பி.ப. 1.35 மணி முதல் இரவு 9 30 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச்சாத்தும்நிகழ்வும் நடைபெறவுள்ளன.

(செ)

● ● ●

(கொக்குவில்)

கோண்டாவில் வடக்கு அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேக விழாவில் பத்து தினங்கள் காரை எஸ். கெங்காவின் தெய்வீகப் பேருரை இடம்பெறவுள்ளது.

(செ-243)

## இலங்கைக்கு சர்வதேச விருது

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினிகூட்டுத்தாபனத்தின் இரண்டு தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்ட இருவீடியோ நிகழ்ச்சிகளுக்கு சர்வதேச விருதுகள் கிடைத்துள்ளன.

சிசிர சுரவீர என்பவர் தயாரித்துள்ள கடந்த காலத்தின் ஊடாக எதிர் காலத்தை நோக்கி என்ற நிகழ்ச்சிக்கு சிறந்த உல்லாசப்பிரயாண ஊக்குவிப்பு விருதும், கிடைத்துள்ளது.

அதுல பீரிஸ் தயாரித்துள்ள பாடசாலை பருவத்தில்உள்ள பாடசாலை செல்லாத குழந்தைகளை மையமாக வைத்து தயாரிக்கப்பட்ட திரி-ரூ-பய்வ் என்ற நிகழ்ச்சிக்கு யுனெஸ்கோவின் சர்வதேச விருதும் கிடைத்துள்ளது.

(க-03)

## வர்த்தகப் பிரமுகர்கள் இன்று யாழ்.வருகின்றனர்

(கொழும்பு)

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளத்தினைச் சேர்ந்த 41 வர்த்தகப் பிரமுகர்கள் இரு நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலவர்த்தகர்களுடன் கூட்டு வர்த்தக முயற்சிகளை ஆரம்பிப்பதே இவ் விஜயத்தின் நோக்கமாகும்.

இவர்கள் யாழ். வர்த்தக சங்கத்திற்கும், யாழ்ப்பாண வர்த்தக சமமேளனத்திற்கும், விஜயம் செய்து வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

ஏற்கனவே கடந்த 2 ஆம் 3 ம் திகதிகளில் தென்பகுதி வர்த்தகர் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயவருடாந்த திருநாள்திருபலி எதிர் வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30மணிக்கு பங்குத்தந்தை எம்.பி ஞானரட்னம் தலைமையில் கொடிபேற்றத்துடன்ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 4 நாட்கள் மாலை 6.00 மணிக்கு திருப்பலி வழிபாடுகளும் 30 ஆம் திகதி மாலை 6 00 மணிக்கு நற்கருணை வழிபாடும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் புனிதரின் திருச் சொரூபபவனியும் ஆசீரும் இடம்பெறவுள்ளன.

(க-7)

### யாழ். உதவி அரசாங்க அதிபர்

## அலுவலகம் அமைக்க காணி கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் அமைப்பதற்கென 20 இலட்ச ரூபா பெறுமதியான 11 பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணி ஒன்று யாழ். பரியோவான் கல்லூரிக்கு முன்பாக யாழ்.வணிகர் கழக மூடாகக் கொள்வனவு செய்யப்பட்டு அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஸ்தாபிக்கப்பட்ட காலம் தொட்டுஇவ் அலுவலகம் தனியார் வீடுகளிலேயே மாறி மாறி இயங்கி வந்ததும்,

வர்த்தகர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள், உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள்சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நிதியுதவியுடன் தற்போது சொந்தக்காணி கொள்வனவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(எ)

## சிந்தனைக்கு விருந்து

### இக் காலத்தில் இப்படி ஒரு மகன்

இருந்தாற்போல் என்நண்பர் ஒருநாள் வந்தார்
''இன்றுடன்நான் ஓய்வெடுக்க எண்ணியுள்ளேன்
வருந்தாதிர் விடைதாரும்'' என்றார் நானும்
'வந்த தென்? சொல்லுமெனஎன்றன் தாயார்
சரிந்துவீழ்ந் தொருபக்கம் செயலற் றிட்டார்
சரியான பராமரிப் பவர்க்க ளித்தே
இருந்துநான் பணிவிடைகள் செய்வேன்' என்றார்
இக்காலத் திப்படிஓர் மகனும் உள்ளார்!

- பழையவன்

## மே மாதம் 14ம் திகதி பூமியில் அதிசயம்

(புதுடில்லி)

எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி பூமியில் அதிசய நிகழ்வொன்று ஏற்பட இருப்பதாக பரபரப்பான செய்திகள் வெளியாகியுள்ளன.

கிரகங்களின் சுழற்சியால் பூமிக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு உண்டு என சோதிடர்கள் கூறிவந்தனர்.

ஆனால் தற்போதய ஆராய்வில் கிரகங்களின் சுழற்சியால் பூமிக்கு அதிசயம் ஏற்படும் வாய்ப்பு உண்டென கண்டறியப் பட்டுள்ளது.

இவ் அதிசய நிகழ்விற்கு ரூப்பில் என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.

சுமார் 62 ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம் பெறும் இந் நிகழ்வு கடந்த 1940 ஆம் ஆண்டு இடம் பெற்றுள்ளது. மேலும் இவ் அதிசயம் இனி 2064 ஆண்டில் தான் இடம்பெறும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (க-07)

## பாகிஸ்தான் ஜமாதே இஸ்லாமிய அமைப்பின் தலைவர் கைதானார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் ஜமாதே இஸ்லாமிய அமைப்பின் தலைவர் குவாஸிமுஷேன் அகமத் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளதாக இஸ்லாமபாத் செய்திகள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானில் சட்டவிரோதமான முறையில் ஆர்ப்பாட்டங்களை செய்தார் என்றகுற்றச்சாட்டின் பேரிலேயேஇவர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ்முஷாரப்தனதுஆட்சிக்காலத்தை நீடிப்பதற்காக கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு இவ்வமைப்பு எதிர்ப்பு தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

அதற்கிடையில் ஜமாதே இஸ்லாமிய தலைவர் கைது செய்யப்பட்டிருப்பது, பாகிஸ்தானின் பொதுத்தேர் தலில் முஷாரப் தோல்வியடைவதை எடுத்துக்காட்டுகிறது என ஜமாதே இஸ்லாமிய அமைப்பு தெரிவித்துள்ளது. (க-8)

## குண்டுவெடிப்புசம்பவத்தில் 13 பேர் துடிதுடித்துப் பலி

### பெங்களூருக்கு அருகில் சம்பவம்

(பெங்களூர்)

தென்னிந்தியாவின் பெங்களூருக்கு மிக அண்மையில் பாறைகளை தகர்க்க வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 13 பேர் துடி துடித்துப் பலியாகியுள்ளனர்.

லொறி ஒன்றில் மரக்குற்றிகளை ஏற்றிக்கொண்டிருந்த வேளையிலேயே இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தின் போது இதுவரை 10 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் அவற்றில் 6 சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரியவருகிறது. (க-07)

## ரயில் விபத்து 6 பேர் உயிரிழப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின்புளோறிடா மாநிலத்தில் இடம பெற்ற ரயில் விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், 100 ற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

450 பேருக்கு மேல்பயணம் செய்த ரயில் தடம்புரண்டதாலேயே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (உ-7)

## இத்தாலிய விமான விபத்து தாக்குதல் சம்பவமே

### புதிய தகவல்கள் தெரிவிப்பு

(ரோம்)

இத்தாலியின் 30 மாடிக் கட்டத்தின் மீது குட்டி விமானம் ஒன்று மோதியது வெறும் விபத்தல்ல அது தாக்குதலாகவும் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இத்தாலியின் 30 மாடிக் கட்டம் ஒன்றின்25 ஆவது மாடியில் திடீரென மோதிய விமானம் தொடர்பாக இத்தாலியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதற்கிடையில் விமானம் மோதியது தாக்குதல் நோக்கமாக இருக்லாம் என்று புதிதாக வெளியான செய்தியால் பரபரப்பு அதிகமாகிய வண்ணம் உள்ளது.

இதேவேளை விமானம் மோதிய 25 ஆவது மாடிக்கு கீழும் -மேலுமான மாடிகள உறுதி அற்றநிலையில்காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலே உள்ள 5மாடிகளும் எப்பொழுதும் இடிந்து விழக்கூடிய வாய்ப்பு காணப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க·07)

# உலக தரிசனம்

## முத்தையா முரளிதரனுக்கு சத்திர சிகிச்சை அவசியம் இல்லை

(கன்பரா)

தோள்பட்டையில் ஏற்பட்ட உபாதை காரணமாக அவுஸ்திரேலியாவில் சிகிச்சை பெற்றுவரும் இலங்கையின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுக்குசத்திர சிகிச்சை செய்யத் தேவையில்லை என்று மருத்துவ ஆய்வுகளில்இருந்து தெரியவருகிறது.

முரளிதரனுக்கு சிகிச்சை அளித்துவரும் அவுஸ்திரேலிய வைத்திய நிபுணர் டேவிட்யங் நேற்றுமுன்தினம் காலை இவ்வறிக்கையை வெளியிட்டார்.

எனினும் குறைந்தபட்சம் 4 வாரங்களுக்காவது முரளிதரன் கையை பாதுகாப்பான முறையில் வைத்திருக்கவேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இங்கிலாந்துடனான மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் முரளிதரன் விளையாடும் சாத்தியக்கூறு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-07)

## நியூசிலாந்து அணி பாக். அணியிடம் தோல்வி

(கராச்சி)

கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ள நியூசிலாந்து அணிக்கும் பாகிஸ்தான் அணிக்குமிடையேநேற்றுமுன்தினம்கராச்சியில்நடைபெற்ற முதலாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் 153 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தான் 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 275 ஓட்டங்களையும் பெற்றுள்ளது. ஜோசவ்யுகான 125 ஓட்டங்களைப் பெற்றார்.

நியூசிலாந்து அணி 50ஓவர்களில் 127 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான 2 வது ஒரு நாள் போட்டி நாளையும் 3 வது ஒரு நாள் போட்டி 27 ஆந் திகதி நடைபெறவுள்ளது. (உ-9)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலய இரதோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் தீர்த்தோற்சவம் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணைஅருள் மிகு காமாட்சி அம்மன் ஆலய இரதோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமையும், தீர்த்தோற்சவம் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார்ஆலய வருடாந்த இரதோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமையும், தீர்த்தோற்சவம் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன. (செ)

★ ★ ★

மூளாய்- வதிரன் புலோலி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமையும், தீர்த்தோற்சவம் வெள்ளிக்கிழமையும் நடை பெறவுள்ளன.

விழாக் காலங்களில் இரவு 7.00 மணிக்கு ''சேக்கிழார் பெரிய புராணம்'' பற்றி இரா. செல்வவடிவேல் தொடர் சொற்பொழிவாற்றி வருகிறார். (செ)

## வெளியார் அச்சுறுத்தல்

## ஆசிய நாடுகளில் இந்தியா முன்னணியில்

(புதுடில்லி)

ஆசிய நாடுகளில் இந்தியாவே வெளியாரின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருப்பதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

13 ஆசியநாடுகளின் வர்த்தகர்கள் கலந்து கொண்ட வேளையில் கொங்கொங்கை சேர்ந்த நிறுவனம் ஒன்று ஆய்வு நடத்திய போதே மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளது.

இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிடையே நடைபெற்றுவரும் போர், சமூக நிலவரம் காரணமாகவே இந்தியா வெளி அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருக்கிறது என அவ்வாய்வு மேலும் தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு அடுத்தபடியாக தாய்லாந்தும், பிலிப்பைன்ஸும் இவ்வாறான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் அவ்வாய்வு மேலும் கூறுகின்றது. (க-08)

## பிலிப்பைன்ஸ் தெற்கில் தொடர் குண்டு வெடிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸின்தென்பகுதியில் நேற்று மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இக்குண்டு வெடிப்புசம்பவங்களுக்கு ஒஸாமாபின்லேடனே காரணம்என்று கூறிய பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி யோறியா மக்கபாலோ அராயோ கெரிலாக்கள் மீது தீவிரமானமுற்றுகை நடத்தப் போவதாக கூறியுள்ளார்.

இதேவேளை, நேற்றுஇடம் பெற்ற17பேரைபலிகொண்ட இரண்டு வெடிப்பைதாமே நிகழ்த்தியதாக அபுசாகிப் கெரில்லா இயக்கம் உரிமை கோரியுள்ளது.

பிலிப்பைன்ஸில், அமெரிக்க இராணுவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இக்குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது· (உ-7)

## சித்திராபௌர்ணமி விசேட வழிபாடு

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு விசேட வழிபாடு, பஜனை என்பனவும் அன்னதானமும் இடம்பெறவுள்ளன. (செ)

## வெளிநாடுகளில் இருந்து நேபாள அரசு கனரக ஆயுதங்கள் கொள்வனவு

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோதீவிரவாதிகளை அழிக்கும்முகமாக வெளிநாடுகளில் இருந்து கனரகஆயுதங்களை நேபாள அரசு கொள்வனவு செய்யவுள்ளது.

மாவோதீவிரவாதிகள்திடீர் திடீர் என நடத்தும் கெரில்லாத்தாக்குதல்கள் மற்றும் பொதுமக்கள் நடமாடும் இடங்களில் தாக்குதல்நடத்தி அநியாயமான உயிரிழப்புகளுக்கு முடிவுகட்டும் விதமாகவே இவ்வாயுத கொள்வனவு இடம்பெற்றுவருவதாக தெரியவருகிறது. (உ-7)

## வைத்திய ஆலோசனை

வெளிக்காட்டுவார். இதனால் உடல் அரிப்பு, தலைசுற்று, மயக்கம் என்பன ஏற்படலாம். எனவேவைத்தியஆலோசனையின் படியே இம்மருந்துகளை பாவிக்க வேண்டும்.

6) கர்ப்பிணித் தாய்மார் தாம் விரும்பியவாறு மருந்துகளை பாவிக்கும் போது அவற்றில் சில மருந்துகள் கருப்பையில் உள்ள குழந்தையை குருதி மூலம் சென்றடைந்து அக் குழந்தையின் வளர்ச்சியை பாதிக்கச் செய்யும். இதனால்உடல் வளர்ச்சி மூளை வளர்ச்சி குன்றியஅங்கவீனமான குழந்தைகள்பிறக்க வாய்ப்புண்டு. எனவே வைத்திய ஆலோசனையின்றி அம் மருந்துகளை கர்ப்பிணித் தாய்மார் பாவிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே இத்தகையவிளைவுகளில் இருந்து நாம் விடுபட வேண்டுமாயின் இவ்வாறான மருந்துகளை கவலையீனமாக தவறான வழிகளில் பாவிப்பதை நிறுத்தி சிறந்த வைத்திய ஆலோசனையுடன் அவர்கள் கூறுகின்றவாறு பாவிப்பது சாலச் சிறந்ததாகும்.

## தந்தை செல்வா நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின்25வது நினைவு தினவிழா எதிர்வரும் 26ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், இலங்கையில்' ஆசிரிய வாண்மை' என்ற தலைப்பில் பேராசிரியர் சபா ஜெயராசா நினைவுப்பேருரையாற்றவுள்ளார். (உ)

## வேட்டைத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய முருகப் பெருமானின் மஹோற்சவத்தில் இன்று பி.ப.2.30 மணிக்கு வேட்டைத்திருவிழா கேணப்புல ஸ்ரீ வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்து மத குரு பீடாதி பதி, சிவாகம கலாநிதி, ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் விளையாட்டு, வாள் விளையாட்டு என்பன இடம் பெறவுள்ளன. (செ)

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப்படும்.

-குறள்

## வலம்புரி

### கல்விக் கொள்கை

கல்விச் சீர்திருத்தங்கள் மூலம் ஆசிரியர்கள் மீது பொறுப்புகள் திணிக்கப் படுகிறது. இதன் மூலம் ஆசிரியர்களிடமிருந்து எதிர் பார்த்த திறனைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகிறது. இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், சிறந்த கல்வி நிர்வாகியுமான அ. பஞ்சலிங்கம் அவர்கள் கருத்துக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தொடர் கருத்தரங்கில் 'மாறிவரும் கல்விச் சீர்திருத்தங்கள்' என்ற பொருள் பட திரு. அ.பஞ்சலிங்கம் அவர்கள் ஆற்றிய உரை ஆழ்ந்து நோக்குதற்குரியது.

காலத்திற்குக் காலம் கல்விச்சீர்திருத்தங்களும், கலைத் திட்டங்களும் கொண்டுவரப்பட்ட போதிலும் மாணவ சமூகம் இன- மொழி- தேசப் பற்றுடன் தான் சார்ந்த கலை- பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக் காக்கும் பக்குவத்தை- மனப்பாங்கைப் பெற்றுக் கொண்டுள்ளதா என்ற கேள்வியெழவேசெய்கிறது. உளவியல் கண்ணோட்டத்தில் கல்வியியல் நிபுணர்கள் தயாரிக்கின்ற கல்வித்திட்டங்களானது ஏதோவொரு நாட்டைப் பின்பற்றியதாகவே அமைந்துள்ளது. அந்தந்த நாடுகள் தமது கலை கலாசார விழுமியங்களுக்கேற்ப தயாரித்த கல்வித் திட்டங்களை நமது நாட்டில் அமுல்படுத்த முனையும் போது அதனால் ஏற்படுகின்ற நடைமுறைச் சிக்கல்கள் பல. எனினும் இதுபற்றி கல்வியியலாளர்கள் சிந்திப்பதாக இல்லை.

முன்னாள் அதிபர் பஞ்சலிங்கம் அவர்கள் கூறிய இன்னுமோர் கருத்து இங்கு நோக்குதற்குரியது. அதாவது கல்விக் கூடங்களுக்கு வழங்கப்படும் வளங்களில் 90 வீதமானவை வசதிபடைத்த-செல்வாக்கு மிகுந்த கல்லூரிகளுக்கே கிடைக்கின்றது. இதனால் ஏனைய கிராமப் பாடசாலைகள் பெரிதும் பின்தங்கி விடுகின்றன என்பதே அவர்கூறிய கருத்தாகும். அவர்கூறிய மேற்போந்த கருத்து யதார்த்தமானது.

நாடு பூராக ஒரே பாடத்திட்டம் கலைத் திட்டம் என வகுக்கப்பட்டுள்ளபோது பாடசாலைகளிடையே ஏற்றத்தாழ்வுகள்- வளப்பற்றாக்குறைகள் இருக்கும் போது பாட விதானங்களை- காலத்திட்டங்களை சமமாக நகர்த்த முடியாதென்பது தெளிவு.

# வைத்திய ஆலோசனைகளுக்கமைவானதாக மருந்துகளின் பாவனையை மேற்கொள்ளுங்கள்

**நடேசன் நிமோஜன்**
மருத்துவபீடம்
யாழ். பல்கலைக்கழகம்

நோயற்ற வாழ்வேகுறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க மக்கள் நோயின்றி வாழவே விரும்புகின்றனர். இதற்கு அவர்களின் பழக்க வழக்கம் உடல் நிலை சுற்றாடல் என்பன சீராக இருத்தல் அவசியம். ஆனால் இவ்வாறான காரணிகள் நன்றாக இருந்தும் அவற்றையும் மீறி மக்கள் நோய்களின் அச்சுறுத்தல்களுக்குஆளாகிகொண்டே இருக்கின்றனர். நவீனஉலகில் புதிய புதிய நோய்கள் கண்டறியப்பட்டாலும் அவற்றிற்கு எதிராக புதிய நவீன மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டு கொண்டே இருக்கின்றது. எனினும் இம்மருந்துகளின் பாவனை.

1 ஒரு வரையறைக்குட்பட்டதாகவும்

2 வைத்தியர்களின் ஆலோசனைகளுக்கு அமைவானதாகவும் இருத்தல் இன்றியமையாததாகும்.

எமதுபிரதேசத்தைபொறுத்தமட்டில் இந்த இரண்டு விடயங்களும் மருந்துப்பாவனையில் மிக முக்கியமான இடத்தைபெறுகின்றன. இவற்றின் மீது காட்டப்படுகின்ற அலட்சிய போக்கானது மக்களின் மீது பல்வேறு பக்க விளைவுகளை உண்டு பண்ணுகின்றது. குறித்த ஒவ்வொரு மருந்துப்பொருளும் அவற்றிற்கு பொருத்தமான முறையிலும், மற்றும்,

1 நோயாளியின் வயது
2 நோயின் தன்மை
3 நோய்க்காரணி

என்பவற்றை பொறுத்தும் பாவனை முறையில் வேறுபடும். எனினும் மக்கள் இவற்றை கருத்தில் கொள்ளாது தாம்விரும்பிய முறையில் இம்மருந்துகளை பாவிக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் பல்வேறு ஆபத்தான நிலமைகளுக்கு ஆளாக வேண்டியுள்ளது. நாம் தவறான பாவனை முறை எனும் போது பின்வரும் பாவனை முறைகளை உதாரணமாக கூறலாம்.

**மருந்துகளை சரியான அளவுகளில் பாவிக்காமை**

நோயின் தன்மையை பொறுத்தும் நோயாளியின் வயதை பொறுத்தும் மருந்துகளின் அளவு மாறுபடும். எனவே வைத்தியரின் ஆலோசனைப்படி சரியான அளவுகளில் அவற்றை உட்கொள்வதன் மூலம்நோயிலிருந்துகுணமடையலாம். மருந்துகளின் அளவுகளில் ஏற்படும் தவறுகளாக பின்வரும் முறைகளை கூறலாம்.

1 சில நோயாளிகள் தமக்கு வழங்கப்பட்ட மருந்தை ஒரு தடவை எடுக்க தவறும்போது அதனை மற்றைய தடவைக்கான மருந்தின் அளவுடன் சேர்த்து எடுக்கின்றனர்.

2 சிலர் தாம் எடுக்க வேண்டிய அளவை விட கூடுதலாகவோ அல்லதுகுறைவாகவோ எடுக்கின்றனர்.

**மருந்தை குறித்த கால இடைவெளியில் குறித்த நாட்களுக்குள் எடுத்து முடிக்காமை**

ஒரு மருந்தை சொல்லப்பட்ட அளவில் குறித்த நேர இடைவெளியில் பாவிக்கும் போதே அது குருதியில்போதுமானளவில் பேணப்பட்டு நோயிலிருந்து விடுபடஉதவும் அதைவிடுத்துபின்வரும்முறைகளை கையாளுதல் தவறாகும்.

சொல்லப்பட்ட நேர இடைவெளியில் பாவிக்காமல், குறைவான அல்லது நீண்ட நேர இடைவெளியில் மருந்துகளை பாவித்தல்.

மருந்துகளை தொடர்ச்சியாக குறித்த நாட்களில் எடுத்து முடிக்காமல் இடைநிறுத்தல். இதற்கு பிரதானமாகஇரு காரணங்களைகுறிப்பிடலாம்.

a ஓரிரு நாட்கள்!மருந்தை பாவித்ததும் நோயின் அறிகுறிகள் குறைகின்றது. அத்தோடு மருந்தை தொடர்ந்து பாவிப்பதை நிறுத்தல்

b சில மருந்துகளுக்கு வெளிக் காட்டப்படும் பக்க விளைவுகளுக்கு பயந்து அம்மருந்துகளை தொடர்ந்து பாவிப்பதைநிறுத்தல்.

**காலாவதியான மருந்துகளை பாவித்தல்**

காலாவதிக்காலம் என்பது மருந்துகள் பழுதடையாமல் இருக்கக்கூடிய கால எல்லையாகும். இதன் பின்னர் அவை பழுதடைய வாய்ப்புண்டு. பின்வரும் சந்தர்ப்பங்களில் காலாவதியான மருந்துகளை பாவிக்க வாய்புண்டு.

குறித்த ஒருமருந்தைநீண்ட நாட்களுக்கு வீட்டில்சேமித்து வைத்து பாவிக்கும் போது அவற்றின் காலாவதி திகதி முடிவடைந்து விடலாம். இதனையறியாமல் அம்மருந்தை தொடர்ந்து பாவித்தல்

மருந்துக்கடை. களில்மருந்துகளை வாங்கும் போது காலாவதித்திகதியை அவதானிக்காமல் வாங்கி பாவித்தல்.

**வயது வந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் ஒரேயளவில் மருந்துகளை பாவித்தல்**

மருந்துகளின் அளவை தீர்மானிக்கும் காரணிகளில் நோயாளியின் வயது மிக முக்கியமான ஒன்றாகும். பெரும்பாலான மருந்துகள் சாதாரணமாக வயதுவந்தஒருவர்க்கு வழங்கும் அளவைவிட குறைவான அளவிலேயே சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும். அதைவிடுத்து சிறுவர்களுக்குவளர்ந்தோர்க்கு கொடுக்கும் அளவைப்போலவே மருந்தை கொடுப்பது ஆபத்தாக அமையலாம்.

உண்மையில் மக்களிடையே மருந்துகள் அவற்றின் பாவனை முறை அவற்றின் பக்க விளைவுகள் பற்றிய போதிய அறிவின்மையே இவ்வாறான தவறான பாவனைகளுக்கு முக்கிய காரணமாகும். மேலும் வைத்தியர்களின் போதிய ஆலோசனையின்றி இம்மருந்துகள் மக்களால் மிக அதிகளவில் பாவிக்கப் படுவதற்கு பல காரணங்களை குறிப்பிடலாம். அவற்றுள்சில,

1. எமது பிரதேசத்தில் போதிய வைத்தியசாலைகள் இல்லாமை.

2. தற்போது இருக்கும் வைத்தியசாலைகளிலும் தேவையான வைத்திய வசதி இல்லாமை.

3. வைத்திய சாலைகளில் நிலவும் பாரிய மருந்து தட்டுப்பாடு.

இதனால் நோயாளிகள் பல சிரமங்களை எதிர் கொள்வதோடு அவற்றை தவிர்ப்பதற்காக பின்வரும் மாற்று வழிகளை கையாள்கின்றனர்.

1. தனியார் வைத்திய சாலைகளுக்கு சென்று பணத்தை கொடுத்து தமது நோய்க்கு மருந்துகளை பெற்றுக்கொள்கின்றனர்.

2. மருந்துக் கடைகளுக்கு சென்று தமது நோயின் அறிகுறிகளை தெரிவித்து மருந்துகளை பெற்றுகொள்கின்றனர்.

3. முன்பு ஒரு தடவை ஏற்பட்ட நோய்க்கு பாவித்த மருந்தினை மீண்டும் அதே போன்ற அறிகுறிகளுடன் ஏற்படும் (வேறு) ஒரு நோய்க்கு பாவிக்கின்றனர். பல நோய்கள் ஒரேமாதிரியான அறிகுறிகளை வெளிக்காட்டும் என்பதை அவர்கள அறிய வாய்ப்பில்லை.

சட்ட ரீதியாக வைத்திய சான்றிதழ் இல்லாத நபர்களிடம் (**malpractitioners**) சென்று தமது நோய்க்கான மருந்துகளை பெற்றுக் கொள்கின்றனர்

வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர் அல்லாதோர் தம் வைத்திய சாலையில் மருந்துகள் பற்றி பெற்றுக் கொண்ட அனுபவத்தின் ஊடாக தமக்கும் தமது உறவினர்களுக்கும் மருந்துகளை தாமே சிபார்சு செய்தல்.

மேற்கூறப்பட்ட வழிமுறைகளில் பெரும்பாலானவை மக்களை தவறான மருந்துப்பாவனைக்கே இட்டு செல்கிறது. எனவே இத்தகைய தவறான மருந்து பாவனையினால் அதனை பாவிக்கும் நோயாளி மட்டுமல்ல வைத்தியர்களும் பெரும் சிரமங்களை (விளைவுகளை) எதிர் கொள்கின்றனர். அவற்றில் சில.

1 மருந்துகளை அதிகளவில் உள்ளெடுக்கும் போது அவை நச்சுத் தன்மையாக மாறி உடலுக்கு தீங்காகலாம். சாதாரணமாக நாம் பாவிக்கும் பனடோல் போன்ற வில்லைகளை மிக அதிகளவில் எடுக்கும் போது அவை சிறுநீரகம், ஈரல் போன்றவற்றை பாதித்து இறுதியில் இறப்பை ஏற்படுத்தலாம்.

2 நுண்ணுயிர்கொல்லிகளை (**antibiotics**) பிழையான அளவிலும் வைத்தியஆலோசனையின்றி ஒழுங்கற்ற முறையில் நீண்ட நாட்களுக்கும் பாவிக்கும் போது அம் மருந்துகளை எதிர்த்துவளரக்கூடிய நுண்ணுயிர்கள் (**Resistant strains**) உருவாக்கப் படுகின்றன. இதனால் அவற்றிற்குரிய நுண்ணுயிர் கொல்லிகளைபாவிக்க முடியாததோடு அவற்றினால் நோய் குறைவடைவதாகவும் இல்லை. இத்தகைய எதிர்ப்புச் சக்தி கொண்ட நுண்ணுயிர்கள் ஏனைய மக்களை சென்றடைந்து அவர்களுக்கும் நோயை ஏற்படுத்தும் போது ஒரு சமுதாயத்திற்கே அத்தகைய நுண்ணுயிர் கொல்லிகளை பாவிக்க முடியாமல் போகின்றது.

3 மருந்துகளை வைத்திய ஆலோசனையின் படி தொடர்ச்சியாக குறித்த நாட்களுக்கு பாவிக்காது இடை நிறுத்துவதால் நோய் மீண்டும் மீண்டும் வர வாய்ப்புண்டாகின்றது உதாரணமாக மலேரியா காய்ச்சலுக்கு தரப்படும் குளோரோகுயின் (**chloroquine**) எனப்படும் வில்லையை சரியான அளவில் குறித்த நாட்களுக்கு எடுக்காவிட்டால் மீண்டும் காய்ச்சல் ஏற்பட வாய்ப்புண்டு.

4 பொதுவாக எந்த மருந்தினையும் அதிகளவில் எடுக்கும் போது வாந்தி தலைச்சுற்று வயிற்று நோ வயிற்றுளைவு தலையிடி என்பன ஏற்படலாம்.

5 ஒரே மருந்தைஒரே மாதிரியான நோயைக் கொண்ட எல்லா நோயாளிகளுக்கும் பாவிக்க முடியாது. ஏனெனில் சில மருந்துகளுக்கு சில நோயாளிகள ஒவ்வாமை இயல்பை (**allergic reaction**)

(6ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### சத்திய சங்கல்பம்

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்.

- திருக்குறள்

ஈசா, நீ சத்திய சங்கற்பன் உனது சங்கற்பத்தைச் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்வேனானால் பிறகு நான் எண்ணியதை எண்ணியாங்கு எய்தப் பெறுவேன்.

இயற்கையின் மேலாம் நியதிக்கு ஒப்ப நாம் எண்ணுவோமானால் அந்த எண்ணம் நம்மை உருவாக்குகிறது. நமது எண்ணம் அருளுக்குப் புறம்பானதானால், அந்த எண்ணமே நம்மை அழித்து விடுகிறது. திருவருளுக்கு ஒப்ப எண்ணுபவன் அதற்கு ஒப்பவினையாற்றுகிறான். அதன் மூலம் கேடுகளையப் படுகிறது. கடைத்தேறுதல் என்பது அத்தகையவனுக்குச் சாத்தியமாகிறது. நலத்தை அவன் எண்ணியாங்கு எய்துகிறான்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்



பனம் பொருள் அபிவிருத்தி கூட்டுறவுக் கலந்துரையாடலின் போது விடுதலைப்புலிகளின் அரசியல் துறை உறுப்பினர் தமிழினி, தமிழ் விழி, அருள்நிலா, ஆகியோர் உட்பட சமாசத்தின் தலைவர் கி.தவராஜா, கூட்டுறவு அமைப்பின் உ.ஆணையாளர் சு.கணேசமூர்த்தி, பேரிணையத்தலைவர் இராசதுரை, பேரிணைய சமாச பொது முகாமையாளர் சிவகணேசன் ஆகியோர் கலந்த கொண்டனர். இந் நிகழ்வில் பங்குகொண்டவர்களை முதலாவது படத்திலும், விடுதலைப்புலிகளின் அரசியல்துறை உறுப்பினர் தமிழினி உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், பனம் பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.





மில்க்வைற்
MILK WHITE SOAP
மில்க்வைற் சோப் இண்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 3541


# யாழ்ப்பாணத்து கலைப் பொக்கிஷங்களை பாதுகாக்க மக்கள் முன் வரவேண்டும்

## சமய - பண்பாட்டுக் குழு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான முயற்சி காரணமாக யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள அமைதி நிலைமையினால் யாழ்ப்பாணத்திற்கு வரும் உல்லாசப் பயணிகளும், வியாபாரிகளும், யாழ்ப்பாணத்தின் விலைமதிப்பற்ற கலாசாரச் சின்னங்களை -பொக்கிஷங்களை கொள்வனவு செய்து எடுத்துச் செல்கின்றனர். இது எமது யாழ்ப்பாணப் பண்பாட்டிற்குப் பேரிழப்பாகும்.

இவ்வாறு யாழ் செயலகத்தினால் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட சமயப்பண்பாட்டுக் குழு வெளியிட்ட செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தேசக்கட்டுமானம் என்பது வெறும் புவிப்பரப்பு சார்ந்த எல்லையிடல் அல்ல. அது அப்புவிப்பரப்பின் அனைத்து வாழ்பனுபவங்களும் சார்பானது. கலை, கைவினைப் பொருட்கள் என்பனவும், இந்த நீண்ட மொழி, மத, சமூக வாழ்வு, அனுபவத்தின் சிறப்புப் பகுதியாக விளங்குவன. இவற்றைப் பாதுகாத்தல் என்பது பண்பாட்டினைப் பலப்படுத்துவதாகவும் தேசத்தையும், தேசியத்தையும் கட்டியெழுப்புவதாகவும் அமையும். ஒவ்வொரு பிரதேசமும் தனது பிராந்தியம் சார்ந்த மொழி, மதம், அனுட்டானங்கள், நம்பிக்கைகள் முதலியன சார்ந்து தமக்கான கலை, கைவினை மரபுகளை காலந்தோறும் வளர்த்தெடுத்துள்ளன. இதற்கு யாழ்ப்பாணமும் விதிவிலக்கல்ல. இதன் அடிப்படையில் அண்மைக் கால சமாதான முயற்சிகளின் பின்னணியில் யாழ்ப்பாணம் வரும் உல்லாசப் பிரயாணிகளாலும், வியாபாரிகளாலும் எமது கலை, கைவினைப் பொருட்கள் விரைவாக குடாநாட்டைவிட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இது எமது பாராமுகத்தாலும், அசிரத்தையாலும் எங்களை அறியாமலே, எங்களிடம் எஞ்சியிருக்கும் எமது வரலாற்று அடையாளங்களை நாம் கைவிட்டுவிடுதலாகும். மிகச் சரியாகக் கூறுவதாயின்-இவற்றின் இழப்பு என்பது எமது அடையாளங்களினதும், பண்பாட்டினதும், வரலாற்றினதும் இழப்புமாகும்.

இந்த நிலைமையில் பொதுமக்களும் தம்மிடையே உள்ள பழைய கைவினை, கலைப்பொருட்களை பணத்திற்காகவோ, அசிரத்தைகாரணமாகவோ வெளியாருக்குக் கொடுக்கக் கூடாது. வியாபாரிகளால் தரப்படும் பணத்திலும் பார்க்க அவை பெறுமதியானவை. பொது மக்கள் மட்டுமன்றி கோயில்கள், தேவாலயங்கள், சனசமூகநிலையங்கள், கலாசார உத்தியோகத்தர்கள், பண்பாட்டு அக்கறையுடையோர் விழிப்புடன் இருக்கவேண்டிய தருணம் இது. ஏற்கனவே கலாசார அழிப்புகளுக்கு உள்ளாகிப்போன தமிழினம் மேலும் இவ்விதமான நிலைமைகளுக்குள் அகப்படாமல் இருக்க வேண்டியுள்ளது.

நாம் ஒவ்வொருவரும் விழிப்புடன் இருந்து எமது அரும்பொருட்களையும், எமது வரலாற்றையும் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்காக அவற்றை விட்டுச் செல்வோம். மலரப்போகும் வாழ்வை அதுவே அர்த்த முள்ளதாக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### வாழப்பாடி...

பாய் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தை தமிழ் நாட்டின் காங்கிரஸ் கட்சியின் தலைவர் இ.வி.கே.எஸ்.இளங்கோவன் ஆரம்பித்து வைத்தார். (த)

### அல்லைப்பிட்டியில்..

பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் நிலைமையை சுமூகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இறுதியில் ஆண் உத்தியோகத்தர்களை பஸ்ஸிலிருந்து இறக்கி சோதனை நடத்தவும், பெண் உத்தியோகத்தர்களை பஸ்ஸில் இருந்தவாறே சோதனை நடத்தவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து சகலரும் தீவிர பரிசோத்னைக்கு உட்படுத்தப்பட்டனர். நிலமை இவ்வாறிருக்க இச் சம்பவம் குறித்து தீவுப்பகுதிக்கு விஜயம் செய்த கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு செய்யப்பட்டதுடன் வேலணைப் பிரதேச செயலகத்தில் விசேட மாநாடொன்றும் நடைபெற்றது.

இம் மாநாட்டில் கண்காணிப்புக் குழு, தீவக கடற்படைப் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர். இதன்போது சோதனை நடவடிக்கைகளை மூன்று தினங்களுக்குள் குறைப்பதாக கடற்படை அதிகாரி உறுதியளித்ததாகத் தெரியவருகிறது. (ந)

### வேலணைப்பிரதேச...

ஆஜர் செய்யப்பட்டபோது அவரை இரண்டு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ம)

## மேதினக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தில் அங்கத்துவம் பெற்ற 'தொழிற்சங்க பிரதிநிதிகளையும் அங்கத்துவம் பெறாத் தொழிற்சங்க பிரதிநிதிகளையும், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் மேதினம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்திற்கு வருகை தருமாறு மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ந)

## அமைச்சர்கள் வெளிநாடுகளில்

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முக்கிய அமைச்சர்கள் பலர் வெளிநாடுகளுக்குச்சென்றுள்ளனர். அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மெலிந்த மொறகொட, ஆறுமுகம் தொண்டமான்,ரவி கருணாநாயக்கா,கே.என். சொக்சி, குணசேகர, உட்பட பல அமைச்சர்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.(வ)

### விசேட பொலிஸ்...

இப்பிரேரணையின் பிரகாரம் விசேட பொலிஸ் அதிரடிப்படையைக் கலைத்துவிட்டு அவர்களை சாதாரண பொலிஸ் சேவையில் சேர்ப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இதனை விசேட பொலிஸ் அதிரடிப் படையின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எதிர்த்துள்ளார்.

விசேட பயிற்சிபெற்ற அதிரடிப் படையைக் கலைத்துவிட்டு அவர்களை சாதாரண பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொண்டால் நாட்டின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலாக அது அமையுமெனக் கூறி அதனைக் கடுமையாக எதிர்த்துள்ளார்.

இந்நிலையில் உடதுறை அமைச்சு இந்த விசேட பொலிஸ் அதிரடிப் படையைக் கலைத்து விட்டு அவர்களை சாதாரண பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்கம் அதனை கலைப்பதற்கு இணங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது. (வ)

## கொடிகாமம் இளைஞன் கிளிநொச்சி குளத்திற்குப் பலி

(வவுனியா)

தமது உறவினர்களைப் பார்ப்பதற்காக நேற்றுமுன்தினம் வன்னிக்கு சென்ற இளைஞர் ஒருவர் கிளிநொச்சி ஐயன்குளத்தில் குளித்த போது நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமானார்.

கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த அரியநாயகம் ஞானசீலன் (வயது-20) என்ற இளைஞரே மரணமானவராவார். அவரின் சடலம் அப்பகுதி மக்களின் உதவியுடன் மீட்கப்பட்டது. (வ)

### புரிந்துணர்வு...

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஸ் குணவர்த்தன, தேசிய ஐக்கிய முன்னணி தலைவர் பேரியல் அஸ்ரப், மற்றும் ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலர் விமல்வீரவன்ச ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (வ-5)

## முன்னாள் பணிப்பாளருக்கு பிணை அனுமதி

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிகால் கருணாரத்தினா மேல் முறையீட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த உத்தரவின்படி 50000ரூபா ரொக்கப் பிணையிலும் சி.ஐ.டி முன்னிலையில் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை ஆஜராக வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவின் ஆதரவாளர்களைத் தாக்கியதாகவும் அமைச்சரைக் கொலை செய்யத் திட்டமிட்டார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த இவரை விசாரணை செய்த கண்டி மேலதிக நீதவான் அடுத்த மாதம் 20ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

எனினும் கருணாரத்ன சமர்ப்பித்த மனுவை பரிசீலித்த மேல் முறையீட்டு நீதி மன்றம் அவ்வரை பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டது (ந.5)

### ஜனாதிபதி...

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

www.president.SL.org என்ற முகவரியூடாக இணைத்தளத்துடன் தொடர்பு கொள்ள் முடியுமென இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

### அனுருத்தவை...

வழங்குவதாக நீதவான் இனேக்காரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தப் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட ஒன்பதாவது சந்தேக நபருக்கெதிரான சாட்சிகள் இல்லாத காரணத்தினால் அவர் குற்றத்தடுப்புப் பிரிவின் வேண்டுகோளிற்கமைய நேற்று விடுதலை செய்யப்பட்டார். (த)

## மாணவன் மீது விசாரணை

(திருநெல்வேலி)

யாழ் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் க.சிவசீலன் நேற்றைய தினம் வல்லை சோதனைச் சாவடியில் படையினரால் ஒருமணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பொங்குதமிழ்நிகழ்வு தொடர்பான 50 இற்கும் மேற்பட்ட படங்கள் கொண்டுவந்தது தொடர்பாகவே இவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இதனால் யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்த பஸ் ஒரு மணி நேரம் தாமதமாகியமை குறிப்பிடத்தக்கது. (த-43)

## செம்பியன்பற்றில் ப.நோ.கூ.ச.கிளை

(திருநெல்வேலி)

வடமராட்சி செம்பியன்பற்றுப் பகுதியில் மருதங்கேணி பலநோக்கு கூட்டுறவுசங்கத்தின் கிளை ஒன்று எதிர்வரும் 30ம் திகதி திறக்கப்படவுள்ளதாக மருதங்கேணி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் எஸ். ராஜேந்திரம் தெரிவித்தார்.

மேற்படி சங்கத்தின் தலைமைக் காரியாலயம் மருதங்கேணியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-43)

## முக்கிய அறிவித்தல்

16-04-2002ம் திகதி இரவு 9.30 மணியளவில் யாழ் நவீனசந்தையில் உள்ள கரன் ரெக்ரைல்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்ட தீயினை அணைக்கும் பொழுது யாழ். மாநகரசபை தீயணைப்புப் படையினரின் பின்வரும் பொருட்கள் அவ் இடத்தில் காணாமல் போய்விட்டது.

எனவே, இதனை கண்டெடுத்தவர்கள் மாநகரசபை தீயணைக்கும் படையில் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

1. தீயணைப்பாளரின் தலைக்கவசம்
2. பிக்கப் ரியூப்
3. வடி கூடை
4. 20 மீற்றர் நைலோன் கயிறு
5. சீலிங்குக் ஒன்று
6. டிவியுசர் பிறாஞ் ஒன்று

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். (C/4001)


நாகம்ஸ்
சுன்னாகம்
இந்தியாவிலும் நாகம்ஸ் சினிமாவிலும் ஒரே தின வெளியீடு
டொப்ஸ்டார் பிரசாந்த், சிம்ரன், வடிவேலு நடித்த
தமிழ்
தினசரி 11.00, 3.00, 6.00 (பு.நே)

ராஜா
(யாழ்ப்பாணம்)
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி 10.30, 2.30, 5.30 [C/3953]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.